Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

தமிழ்Mirror www.tamilmirror.lk

THURSDAY, MAY 23, 2024

வியாழக்கிழமை, மே 23, 2024 | ஒளி: 09 கதிர்: 258 | பக்கம்:07 | நகரப்பதிப்பு★ FREE

# “தமிழர்களுக்கு நீதி கிடைக்காது”



**இரவில் வீடு புகுந்த பொலிஸார் பெண்களை அடாவடியாக கதறக்கதற கைது செய்து இழுத்து சென்றனர்**

**இலங்கை சட்டத்தில் இவ்வாறு உள்ளதா அல்லது இன்னொரு நாட்டு சட்டத்தை இலங்கை பின்பற்றுகின்றதா?**

பொலிஸாரின் அராஜகமும் அடக்க முடியாத அதிகாரப்பசியும் தமிழ் மக்களின் வாழ்வியலை பறித்தெடுக்கின்றது. இந்த நாட்டில் நீதி மரணித்து விட்டது. சட்டம் சாகடிக்கப்பட்டு விட்டது .இலங்கையின் சட்டத்தினால் தமிழர்களுக்கு ஒருபோதுமே நீதி கிடைக்காது என இலங்கை தமிழரசுக்கட்சியின் யாழ்.மாவட்ட எம்.பி.யான எஸ்.சிறிதரன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (22) எதிர்க்கட்சியினால் கொண்டுவரப்பட்ட சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே இவ்வாறுத்தெரிவித்தார். இந்த அரசாங்கம் சட்டங்களை சரியான முறையில் நடைமுறைப்படுத்துகிறதா? சட்டங்களின் வரையறைகளை பின்பற்றுகின்றதா? நீதித்துறை சட்டங்களின் ஊடாக கொண்டுவரப்பட்ட பல்வேறு விடயங்கள் அந்த நீதித்துறை ஊடாகவே நடைமுறைப்படுத்தப்படாமல் போகின்றது .கடந்த மே 17,18 ஆம் திகதிகளில் இலங்கையின் பல பாகங்களில் நடைபெற்ற விடயங்கள் தொடர்பில் இந்த நாடு ஒரு சட்டத்திற்குள்தான் இருக்கின்றதா? என்பதையும் இங்கு கேட்க விரும்புகின்றேன்.

தொடர்ச்சி P2

## 278 கைதிகளுக்கு மன்னிப்பு

வெசாக் பண்டிகையை முன்னிட்டு விசேட அரச மன்னிப்பின் கீழ் 278 கைதிகளுக்கு பொதுமன்னிப்பு வழங்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலை ஊடகப் பேச்சாளர் சிறைச்சாலை ஆணையாளர் காமினி பி. திஸாநாயக்க தெரிவித்தார்.

அரச பொதுமன்னிப்பு பெறும் கைதிகளில் வெலிக்கடை சிறைச்சாலையில் இருந்து 15 கைதிகளும், மஹர சிறைச்சாலையில் இருந்து 37 கைதிகளும் அடங்குவதாகவும், 10 பெண் கைதிகள் உட்பட அனைத்து சிறைச்சாலைகளில் இருந்து 278 கைதிகளும் அடங்குவதாக திஸாநாயக்க தெரிவித்தார்.

## புலிகள் கொன்றோரை ஏன் நினைவுகூரவில்லை

### அக்னெஸ் கலமார்ட்டிடம் வீரசேகர கேள்வி

தமிழீழ விடுதலை புலிகளை நினைவுகூர்ந்த சர்வதேச மன்னிப்புச் சபையின் செயலாளர் அக்னெஸ் கலமார்ட் புலிகளால் படுகொலை செய்யப்பட்ட சிங்களவர்களையும், இராணுவத்தினரையும் ஏன் நினைவுகூரவில்லை என ஆளும் தரப்பு எம்.பி.யுமான ரியர் அட்மிரல் சரத் வீரசேகர கேள்வியெழுப்பினார்.

தொடர்ச்சி P2

## பாடசாலைக்குச் சென்ற சிறுமி பஸ்ஸுக்கு பலி




பேரவிலவிலிருந்து கம்பளை நோக்கி பயணித்த தனியார் பஸ்ஸில் மோதி பாடசாலை மாணவி ஒருவர் உயிரிழந்துள்ள சம்பவம் கம்பளை புதிய குருந்துவத்தை பிரதேசத்தில் புதன்கிழமை (23) பதிவாகியுள்ளது .

பதித்தலாவ, மல்கொல்ல பிரதேசத்தைச் சேர்ந்த 10 வயதுடைய சிறுமி ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார் .

தொடர்ச்சி P2

## ஞானசார தேரரை மன்னிக்கவும்

### இலங்கை இந்து சம்மேளம் கோரிக்கை

கலபொட அத்தே ஞானசார தேரருக்கு ஜனாதிபதி பொது மன்னிப்பு வழங்குமாறு இலங்கை இந்து சம்மேளனம் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

ஜனாதிபதிக்கு அவ்வமைப்பு எழுதிய கடிதத்தில், ஞானசார தேரரின் ஜனநாயகக் குரலை முடக்கும் நோக்கத்துடன்

தொடர்ச்சி P2

## போதைபொருள் குறித்து அவதானம் வேண்டும்



பாகிஸ்தானில் இருந்து உருளைக்கிழங்குகள் ஊடாக இலங்கைக்கு ஐஸ் போன்ற போதைப் பொருட்கள் சூட்சுமான முறையில் கடத்தப்ப டுவதாகவும் இது தொடர்பில் புலனாய்வு பிரிவினர் அவதானம் செலுத்த வேண்டும் என்று சுயாதீன எதிரணி பாராளுமன்ற உறுப்பினர் நிமல் பியதிஸ்ஸ தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



## ஈரானிய ஜனாதிபதியின் மறைவுக்கு ஜனாதிபதி இரங்கல்

கொழும்பில் உள்ள ஈரான் தூதரகத்திற்கு புதன்கிழமை (22) காலை சென்ற ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசியின் திடீர் மரணத்திற்கு தனது இரங்கலைத் தெரிவித்தார்.

தூதரகத்திற்கு சென்ற ஜனாதிபதியை, இலங்கைக்கான ஈரான் தூதுவர் கலாநிதி அலி ரீஸா டெல்கோஷ் உள்ளிட்ட பணிக்குழாம் வரவேற்றது.

ஈரான் ஜனாதிபதியின் மறைவு குறித்து ஈரான் தூதுவர் உள்ளிட்டோருடன் கலந்துரையாடிய ஜனாதிபதி, அங்கு வைக்கப்பட்டிருந்த குறிப்பேட்டில் இரங்கல் குறிப்பை பதிவிட்ட பின்னர், ஜனாதிபதி இப்ராஹிம் ரைசியின் திடீர் மரணத்திற்கு ஈரான் அரசாங்கத்திற்கும் அந்நாட்டு மக்களுக்கும் தனதும், இலங்கை அரசாங்கத்தினதும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்தார்.

## ஈரான் ஜனாதிபதிக்கு சபையில் அஞ்சலி

ஹெலிகொப்டர் விபத்தில் உயிரிழந்த ஈரான் ஜனாதிபதி மொஹமட் ரைஸியின் திடீர் மரணத்திற்கு அனுதாபம் தெரிவிக்கும் வகையில் பாராளுமன்றத்தில் ஒரு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

பாராளுமன்ற நடவடிக்கைகள் புதன்கிழமை(22) ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர் அரச தரப்பின் பிரதம கொறடாவான அமைச்சர் பிரசன்ன ரணதுங்க மௌன அஞ்சலி செலுத்தும்

தொடர்ச்சி P2



## அடிப்படைவாத தாக்குதல்களை “தடுக்க முடியாது”

இஸ்லாமிய அடிப்படைவாதம் தொடர்பில் முன்வைக்கப்பட்டுள்ள பரிந்துரைகளை அரசாங்கம் செயற்படுத்த வேண்டும். இல்லையேல் உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதலை போன்ற அடிப்படைவாத தாக்கு தல்கள் இலங்கையிலும் எதிர்காலத்தி ல் நடத்தப்படுவதனை தடுக்க முடியாதென ஆளும் தரப்பு எம்.பி.யுமான ரியர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்தார்.



தொடர்ச்சி P2

## மரங்கள் விழுந்ததில் 2 பெண்கள் பலி

புத்தளம் - மாரவில மற்றும் மாதம்பை பகுதிகளில் வீதியோரத்தில் இருந்த இரண்டு பெரிய மரங்கள் வீழ்ந்ததில் பெண்கள் இருவர் உயிரிழந்துள்ளதுடன், ஆண் ஒருவர் காயமடைந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

மாராவில - பிலாகமுல்ல பிரதேசத்தில் மோட்டார் சைக்கிள் ஒன்றின் மீது பாரிய மரமொன்று வீழ்ந்ததில் மோட்டார் சைக்கிளில் பயணித்த பெண்ணொருவர் உயிரிழந்துள்ளதுடன், இதேவேளை, சுதுவெல்ல பிரதேசத்தில் மரமொன்று வீழ்ந்ததில் பெண்ணொருவர் உயிரிழந்துள்ளார்.

## சதொசவில் விலை குறைப்பு

எதிர்வரும் வெசாக் பண்டிகையை முன்னிட்டு லங்கா சதொசவில் சில அத்தியாவசிய பொருட்களின் விலைகளைக் குறைக்கப்பட்டுள்ளது.

நெத்தலி (தாய்லாந்து) ஒரு கிலோ கிராம் 145 ரூபாயால் குறைப்பு - புதிய விலை 950.00 ரூபாய்,

தொடர்ச்சி P2

## இரண்டு சட்ட மூலங்கள் சமர்ப்பிப்பு

நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் அவசர சட்டமூலங்களாக பகிரங்க நிதிசார் முகாமைத்துவ சட்டமூலம் மற்றும் பொருளாதார நிலைமாற்றம் சட்டமூலம் என்பன முதலாம் வாசிப்புக்காக சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டது.

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (22) அரச தரப்பின் பிரதம கொறடாவான அமைச்சர் பிரசன்ன ரணதுங்க இந்த சட்டமூலங்களை சபைக்கு சமர்ப்பித்தார்.

இதில் பகிரங்க நிதிசார் முகாமைத்துவ சட்டமூலமானது,



தொடர்ச்சி P2

தோட்டத் தொழிலாளர்களுக்கு

## இவ்வளவு தான் இறுதி சம்பளம்

தோட்டத் தொழிலாளர்களின் சம்பள விடயத்தில் தொழில் ஆணையாளரால் குறிப்பிடப்பட்டு, தொழில் அமைச்சரால் வர்த்தமானியில் அறிவிக்கப்படும் தொகையே இறுதி சம்பளமாக அமையும் என்று நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவீத்தார்.

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (22) எதிர்க்கட்சியினால் பொருளாதாரம், சட்டம் ஒழுங்கு மற்றும் பாதுகாப்பு உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பாக கொண்டுவரப்பட்ட சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்தின் போது தமிழ் முற்போக்குக் கூட்டணி பாராளுமன்ற உறுப்பினர் வேலுக்குமாரால் எழுப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே நிதி இராஜாங்க அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

வேலுக்குமார் எம்.பி கேள்வியெழுப்புகையில்,

தோட்டத் தொழிலாளர்களின் தினசரி சம்பளத்தை 1,700 ரூபாய் வரையில் அதிகரித்து மே முதலாம் திகதி வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டது.



தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

## போதைபொருள் குறித்து அவதானம் வேண்டும்

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (22) விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்தார்.
அதன்போது நிமல் பியதிஸ்ஸ எம்.பி மேலும் கூறுகையில்,

நாட்டில் மரக்கறி வகைகளை அதிக விலைக்கே மக்கள் வாங்க வேண்டியுள்ளது. கரட் விலை கிலோவொன்று 3000 ரூபா வரையில் உயர்வடைந்தது. மரக்கறி உற்பத்தியில் உருளைக்கிழங்கு உற்பத்தியே மிகவும் கடினமானது. ஒரு மூடை உருளைக்கிழங்கு 35,000 ரூபா வரையில் சந்தையில் விற்பனையாகின்றது. உருளைக்கிழங்கு உற்பத்தி செய்யும் விவசாயிகளே அதிக கஸ்டங்களுக்கு முகம்கொடுக்கின்றனர்.

இப்போது உருளைக்கிழங்கு அறுவடை இடம்பெறுகின்ற நேரத்தில் வெளிநாட்டில் இருந்தும் உருளைக்கிழங்கு இறக்குமதி செய்யப்படுகின்றது. அவ்வாறு வெளிநாட்டில் இருந்து கொண்டு வரும் உருளைக் கிழங்குகள் பாவனைக்கு உகந்ததாக இல்லை.

இதேவேளை எனக்கு தகவலொன்று கிடைத்ததுள்ளது. இது புலனாய்வு அதிகாரிகளுக்கு முக்கியமான தகவலாக இருக்கும். அதாவது பாகிஸ்தானில் இருந்து கொண்டு வரப்படும் உருளைக்கிழங்கு ஊடாக போதைப் பொருள் வர்த்தகம் மிகவும் சூட்சுமான முறையில் நடக்கின்றது. இங்கு பாவனைக்கு எடுக்கும் உருளைக்கிழங்கு உள்ளே, ஐஸ் போன்ற போதைப் பொருட்களை வைத்து கொண்டுவரும் வியாபாரமொன்று நடக்கின்றது. மிகவும் வெற்றிகரமாக இந்த வியாபாரம் நடப்பதாக தகவல்கள் கிடைத்துள்ளன. இது தொடர்பில் அதிகாரிகள் அவதானம் செலுத்த வேண்டும் என்றார்.

## “தடுக்க முடியாது”

இந்தியாவின் பாரதிய ஜனதா கட்சியை சேர்ந்தவர்களையும், இந்துக்களையும் படுகொலை செய்வதற்காகவே ஐ. எஸ்.ஐ.எஸ். அமைப்பை சேர்ந்த 4 இலங்கை முஸ்லிம்கள் கடந்த 18 ஆம் திகதி இந்தியாவுக்கு சென்றுள்ளார்கள் என்றார். பாராளுமன்றத்தில் புதன்கிழமை (22) எதிர்க்கட்சியினால் கொண்டுவரப்பட்ட சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்திலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார். ஐக்கிய மக்கள் சக்தியின் எம்.பி.யான காவிந்த ஜயவர்தன,எழுந்து ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பை சேர்ந்த நான்கு இலங்கை முஸ்லிம்கள் இந்தியாவில் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.இந்தியாவில் தாக்குதல்களை நடத்த இவர்கள் அங்கு சென்றுள்ளதாக குறிப்பிடப்படுகிறது. ஆகவே அடிப்படைவாத செயற்பாடுகள் குறித்து மீண்டும் அச்சம் எழுந்துள்ளது. இவ்விடயம் தொடர்பில் அரசாங்கத்தின் நிலைப்பாடு என்ற என்று கேள்வியெழுப்பினார். இதற்கு சரத் வீரசேகர பதிலைக்கும்போதே,
இந்தியாவில் கைது செய்யப்பட்டுள்ள 4 இலங்கை முஸ்லிம்கள் குறித்து விசேட கவனம் செலுத்தியுள்ளோம்.மொஹமட் நுஸ்ரத், மொஹமட் நஃப்ரான்,மொஹமட் ரஸ்தீன் ,மொஹமட் ஃபரிஷ் ஆகிய நான்கு இலங்கை முஸ்லிம்கள் இந்தியாவில் அகமதாபாத் விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்கள். இவர்கள் ஐ.எஸ்.ஐ.எஸ்.அமைப்பின் உறுப்பினர்களாவர்.இவர்கள் இந்த மாதம் 18 ஆம் திகதி இந்தியாவுக்கு சென்றுள்ளார்கள். இவர்கள் 4 இலட்சம் ரூபாவுக்காக தாக்குதல்களை நடத்த சென்றுள்ளதாக குறிப்பிடப்படுகிறது. இந்தியாவில் பாரதீய ஜனதா கட்சியை சேர்ந்தவர்களையும் , இந்துக்களையும் படுகொலை செய்வதற்காக இவர்கள் இந்தியாவுக்கு சென்றுள்ளதாகவும் 3 அல்லது நான்கு மாதங்களுக்குள் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் அடிப்படைவாத கொள்கை களினால் ஈர்க்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்படுகிறது. உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட குழுக்கள் அறிக்கைகளை சமர்ப்பித்து பல பரிந்துரைகளை முன்வைத்துள்ளன. ஒருசில இஸ்லாமிய அமைப்புக்கள் தடை செய்யப்பட்டு ள்ளன. மதரஸா பாடசாலைகள் தொடர்பிலும் குறிப்பிடப்பட்டுள்ளன. ஆனால் அரசாங்கம் முழுமையாக பரிந்துரைகளை செயற்படுத்தவில்லை. ஆகவே பரிந்துரைகளை அலட்சியப்படுத்தாமல் செயற்படுத்த வேண்டும் இல்லையேல் இலங்கையில் மீண்டும் உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல் போன்ற அடிப்படைவாத தாக்குதல்கள் இடம்பெறுவதனை தடுக்க முடியாது என்றார்.

# “தமிழர்களுக்கு நீதி கிடைக்காது”



முள்ளிவாய்க்காலில் மக்கள் கொல்லப்பட்ட 15 ஆம் ஆண்டு நிறைவில் அந்த முள்ளிவாய்க்கால் கஞ்சியை நினைவுபடுத்தி வடக்கு,கிழக்கு தெற்குமக்கள் கூட இந்தக்கஞ்சியை எல்லா இடங்களிலும் வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது , இவ்வாறு செய்கின்ற நிலையில் கிழக்கு மாகாணத்தில் திருகோணமலையில் உள்ள சம்பூரில் கஞ்சி காய்ச்சியதற்காக இரவில் வீடு புகுந்து பெண்களை பொலிஸார் அடாவடியாக கதறக்கதற கைது செய்து இழுத்து சென்றனர். இவ்வாறு கைது செய்வது எந்த நாட்டு சட்டத்திற்குள் உள்ளது. ?இலங்கை சட்டத்தில் இவ்வாறு உள்ளதா அல்லது இன்னொரு நாட்டு சட்டத்தை இலங்கை பின்பற்றுகின்றதா? என்றும் வினவினார்.

## இரண்டு சட்ட மூலங்கள் சமர்ப்பிப்பு

சிறந்த பேரினப் பொருளாதார முகாமைத்துவத்துக்காக நிதிக் கொள்கையை மேம்படுத்தும் நோக்கில் பகிரங்க நிதிசார் முகாமைத்துவ கட்டமைப்பில் பகிரங்க நிதிகளின் பொறுப்புக்கூறல்,மேற்பார்வை செய்தல்,முகாமைத்துவம் செய்தல்,மற்றும் கட்டுப்படுத்துதல் என்பனவற்றை வலுப்படுத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்கும்,

நிதிசார் முகாமைத்துவத்துடன் தொடர்புப்பட்ட நிறுவனஞ்சார் பொறுப்புக்களை தெளிவுப்படுத்துவதற்கும்,வரவு செலவுத் திட்ட முகாமைத்துவத்தினை வலுப்படுத்துவதற்கும்,நிதிக் கொள்கை மற்றும் நிறைவேற்றத்தின் பொதுமக்கள் ஆராய்வுகளை வசதிப்படுத்துவதற்கும், 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க ,நிதிச் சட்டத்தின் பாகம் 2 இன் 8 ஆம் மற்றும் 14 ஆம் பிரிவுகளை நீக்குவதற்கும்,2003 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க ,நிதி முகாமைத்துவ (பொறுப்பு) சட்டத்தினை நீக்குவதற்கும் அத்துடன் அவற்றோடு தொடர்புப்பட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்காக ஏற்பாடு செய்யும் வகையில் இந்த சட்டமூலம் உருவாக்கப்பட்டுள்ளது. பொருளாதார நிலைமாற்றம் சட்டமூலமானது,

**“ ,1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க,இலங்கை முதலீட்டுச் சபை சட்டத்தை நீக்குவதற்கும்,அவற்றோடு தொடர்புப்பட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான எல்லாக் கருமங்களுக்கும் ஏற்பாடு செய்யும் வகையில் இந்த சட்டமூலம் உருவாக்கப்பட்டுள்ளது.**

பொருளாதார நிலைமாற்றம் மீதான தேசியக் கொள்கைகளை ஏற்பாடு செய்வதற்கும், இலங்கை பொருளாதார ஆணைக்குழு,இலங்கை முதலீட்டு வலயங்கள், சர்வதேச வியாபாரத்துக்கான அலுவலகம்,தேசிய உற்பத்தித்திறன் ஆணைக்குழு, இலங்கை பொருளாதார மற்றும் சர்வதேச வியாபாரத்துக்கான நிறுவகம் ஆகியவற்றை தாபிப்பதற்கும்,1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க,இலங்கை முதலீட்டுச் சபை சட்டத்தை நீக்குவதற்கும்,அவற்றோடு தொடர்புப்பட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான எல்லாக் கருமங்களுக்கும் ஏற்பாடு செய்யும் வகையில் இந்த சட்டமூலம் உருவாக்கப்பட்டுள்ளது.



## எதிர்க்கட்சித் தலைவர் இரங்கல்...

கொழும்பில் உள்ள ஈரான் தூதரகத்திற்கு புதன்கிழமை (22) காலை சென்ற எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசியின் திடீர் மரணத்திற்கு தனது இரங்கலைத் தெரிவித்தார்.
தூதரகத்திற்கு சென்ற எதிர்க்கட்சித் தலைவரை, இலங்கைக்கான ஈரான் தூதுவர் கலாநிதி அலி ரீஸா டெல்கோஷ் உள்ளிட்ட பணிக்குழாம் வரவேற்றது.

## புலிகள் கொன்றோரை ஏன் நினைவுகூரவில்லை

இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங் இலங்கையின் உள்ளக விவகாரங்களில் தலையிடுகிறார். .யாழ்ப்பாணத்துக்கு சென்று விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் போராளிகளை சந்தித்து சுயநிர்ணயம் பற்றி பேசியுள்ளார் எனக் குற்றம்சாட்டினார்.

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (22) எதிர்க்கட்சியினால் கொண்டுவரப்பட்ட சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு கேள்வி எழுப்பினார்.

விடுதலை புலிகளுடனான யுத்தம் முடிவுக்கு கொண்டு வந்து 15 ஆண்டுகள் பூர்த்தியடைந்துள்ள நிலையில் யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்த இராணுவத்துக்கு எதிரான செயற்பாடுகளும் தீவிரமடைந்துள்ளன.இலங்கை இராணுவத்தினருக்கு எதிராக அமெரிக்கா கொண்டு வந்த 30/1 பிரேரணைக்கு நல்லாட்சி அரசாங்கம் இணை அனுசரணை வழங்கியது.இதன் பின்னரே இராணுவத்துக்கு எதிராக நெருக்கடிகள் அதிகரித்துள்ளன.

முன்னாள் ஜனாதிபதி கோட்டபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் 30/1 பிரேரணையில் இருந்து விலகிய போதும் அப்பிரேரணையின் உள்ளடக்கங்கள் செயற்படுத்தப்பட்டுள்ளன. இலங்கை இராணுவத்தினரை சர்வதேச நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த உறுப்பு நாடுகளுடன் கலந்துரையாடியுள்ளதாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் காரியாலயம் கூறியுள்ளமை சாதாரணவிடயமல்ல.

விடுதலை புலிகள் தற்போது பகிரங்கமாக நினைவு கூரப்படுகின்றனர். கடந்த வாரம் இடம்பெற்ற நினைவேந்தலில் பலர் பங்கு பற்றியிருந்தார்கள். வெள்ளையர்களும் கலந்து கொண்டார்கள். சர்வதேச மன்னிப்புச் சபையின் செயலாளர் நாயகம் அக்னெஸ் கலமார்ட்டும் முள்ளிவாய்க்கால் சென்று விடுதலைப் புலிகளை நினைவு கூர்ந்தார்.இந்த யுத்தத்தில் புலிகளால் படுகொலை செய்யப்பட்ட சிங்களவர்களையும், இராணுவத்தினரையும் ஏன் அவர் நினைவு கூரவில்லை? என வினவினார்.

## பாடசாலைக்குச் சென்ற சிறுமி பஸ்ஸுக்கு பலி

பேருந்தில் இருந்து இறங்கிய சிறுமி பேருந்து புறப்படுவதற்கு முன்னர், முன்னால் உள்ள வீதியைக் கடந்த போதே இவ்வனர்த்தம் ஏற்பட்டுள்ளது.

பேருந்தின் ஓட்டுனர் மற்றும் நடத்துனர் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளதுடன் இது தொடர்பிலான மேலதிக விசாரணைகளை புதிய குருந்துவத்தை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## சதொசவில் விலை குறைப்பு

பெரிய வெங்காயம் (இந்தியன்) ஒரு கிலோ கிராம் 40 ரூபாயால் குறைப்பு - புதிய விலை 250.00 ரூபாயாகும்.

ஒரு கிலோ கிராம் கடலை (பெரியது) 38 ரூபாயால் குறைப்பு - புதிய விலை 450.00 ரூபாயாகும். ஒரு கிலோ கிராம் வெள்ளைச் சீனியின் புதிய விலை 275.00 ரூபாவாகவும் குறைப்பதற்குத் தீர்மானித்துள்ளது. குறித்த பொருட்களை வாடிக்கையாளர்கள் நாடளாவிய ரீதியிலுள்ள அனைத்து லங்கா சதொச விற்பனை நிலையங்களிலும் புதன்கிழமை (22) முதல் பெற்றுக்கொள்ள முடியுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஞானசார தேரரை மன்னிக்கவும்

அரசாங்கத்தின் சில ஜனநாயக அமைப்புகளால் ஞானசார தேரரின் சில அறிக்கைகள் மற்றும் நடத்தைகள் தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டுள்ளன அல்லது தவறாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது என அவ்வமைப்பு தெரிவித்துள்ளது.

ஞானசார தேரர், அந்தந்த மத நம்பிக்கைகளைப் பின்பற்றுபவர்கள் மத்தியில் சமாதானத்தை நிலைநாட்டவும், நாட்டின் பொருளாதார, சமூக மற்றும் ஆன்மீகத் தளங்களை அழிக்கக்கூடிய முரண்பாடுகளை இல்லாதொழிக்கவும் உழைத்துள்ளதாகவும் தேரரின் சேவைகளையும் குறிப்பிட்டுள்ளனர்.

## ஈரான் ஜனாதிபதிக்கு சபையில் அஞ்சலி

பிரேரணையை பாராளுமன்றத்தில் முன்வைத்தார்.

இந்த நாட்டுக்கு அண்மையில் விஜயம் செய்த கடைசி அரச தலைவர் ஈரான் ஜனாதிபதி என்பதையும் ரணதுங்க நினைவு கூர்ந்தார். உமா ஓயா திட்டத்தை நிறைவேற்றுவதற்கு தேவையான ஏற்பாடுகள் மற்றும் ஆதரவை வழங்கியதை நினைவுகூர்ந்த அமைச்சர், ஈரான் ஜனாதிபதியின் மறைவுக்கு பாராளுமன்றத்தில் ஒரு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தி தனது அனுதாபத்தை தெரிவிக்க முன்வந்தார். அதன்படி, சபாநாயகர் உட்பட ஆளும் மற்றும் எதிர்க்கட்சி அமைச்சர்கள் இருக்கையில் இருந்து எழுந்து ஒரு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தினர் அடுத்து, அதன் பின்னர் சபை நடவடிக்கைகள் ஆரம்பமாகின .

## இவ்வளவு தான் இறுதி சம்பளம்

கடந்த 3 வருடங்களாக அவர்களின் சம்பளம் அதிகரிக்கப்படவில்லை. இந்நிலையில் முதலாளிமார் சம்மேளனம் அந்த வர்த்தமானிக்கு எதிராக வழக்கு தொடர்ந்துள்ளது. இந்த விடயத்தில் அரசாங்கத்தின் நிலைப்பாடு என்ன? என வினவினார்.

இதன்போது பதிலளித்த நிதி இராஜாங்க அமைச்சர் கூறுகையில்,
அரச தலைவரே தோட்டத் தொழிலாளர்களுக்கு சம்பளம் அதிகரிக்கப்பட வேண்டும் என்று தீர்மானித்துள்ளார். அதன்படி 1,700 ரூபாய் சம்பளம் வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி தோட்டக் கம்பனிகள், தொழிற்சங்கங்கள் யோசனைகளை முன்வைக்க முடியும். அந்த யோசனைகளின் பின்னர் தொழில் ஆணையாளர் நாயகம், அது தொடர்பாக ஆராய்ந்து வழங்கும் யோசனைக்கமைய தொழில் அமைச்சரால் வர்த்தமானியில் அறிவிக்கப்படும் தொகையே சம்பளமாகும்.

# வைகாசி திருக்குளிர்ச்சி சடங்கு

■ வி.ரி.சகாதேவராஜா

வரலாற்று பிரசித்தி பெற்ற காரைதீவு ஸ்ரீ கண்ணகை அம்மன் ஆலய வருடாந்தவைகாசி திருக்குளிர்த்தி சடங்கின் இறுதி நிகழ்வான குளிர்த்தி பாடும் சடங்கு செவ்வாய்க்கிழமை (21) அதிகாலை பக்திபூர்வமாக சிறப்பாக நடைபெற்றுள்ளது .

இம்முறை வைகாசி திருக்குளிர்சி சடங்கு கடந்தகாலத்தை விட ஆயிரக்கணக்கான பக்தர்களுடன் மிகவும் சிறப்பாக நடைபெற்றது..



அதிகாலை 4 மணியளவில் சடங்கு பூஜையும் திருக்குளிர்த்தி பாடலும்



ஆரம்பமாகி காலை 5.30 மணியளவில் நிறைவுற்றது.

கடந்த ஒருவார காலமாக பறை



மேளம் குழல் ஒலிக்க, கப்புகன்மார் முன்னிலையில், உடுக்கை ஒலியுடன் பக்தர்களின் அரோஹரா கோஷம் குரவை



ஒலிக்கு மத்தியில் பகலில் பச்சை கட்டடல் இரவில் ஊர்சுற்றுக்காவியம் பாடல் இடம்பெற்று வந்துள்ளது .

# "மின் கட்டணத்தை குறைக்கவும்"



மழை காரணமாக மின் உற்பத்தி அதிகரித்துள்ளது.

எனவே மின் கட்டணத்தை குறைக்க வேண்டுமென எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச .வலியுறுத்தினார்பாராளுமன்றத்தில் புதன்கிழமை (22) விசேட கூற்றை முன்வைத்தபோதே இவ்வாறு வலியுறுத்திய அவர் மேலும் கூறுகையில்,

கனமழை காரணமாக நீர்மின் நிலையங்களுக்கு அருகில் உள்ள நீர்த்தேக்கங்களில் நீர்மட்டம் அதிகரித்துள்ளது. காசல்ரீ மற்றும் மவுஸ்ஸாக்கலை, விக்டோரியா, ரன்தெனிகல மற்றும் சமனல வெவ ஆகிய நீர்த்தேக்கங்களில் நீர் மட்டங்கள் அதிகரித்துள்ளன.

**"இலங்கை பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவும் இலங்கை மின்சார சபையும் ஒன்றிணைந்து இந்த நன்மையை மின்சார பாவனையாளர்களுக்கு வழங்கு மின்கட்டணத்தை குறைக்க வேண்டும் என்றார்**

இவ்வாறான நிலையில், மின்சார அலகொன்றின் விலையை குறைப்பதற்கான முன்மொழிவுகளை சமர்ப்பிக்குமாறு 2 தடவைகள், மின்சார சபையிடம் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு கோரியுள்ளது. என்றாலும் அந்த முன்மொழிவுகள் இதுவரையில் சமர்ப்பிக்கப்படவில்லை.

15-20 சதவீதமாக இருந்த நீர்மின் உற்பத்தி மட்டம் இம்மாதம் 20 ஆம் திகதி ஆகும் போது 31 சதவீதமாக அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில், இலங்கை பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவும் இலங்கை மின்சார சபையும் ஒன்றிணைந்து இந்த நன்மையை மின்சார பாவனையாளர்களுக்கு வழங்கு மின்கட்டணத்தை குறைக்க வேண்டும் என்றார்.

## மின்சாரம் தாக்கி வர்த்தகர் பலி

புத்தளம், முந்தல் பிரதேசத்தில் மின்சாரம் தாக்கி, கம்பஹா, இம்புல்கொட பிரதேசத்தைச் சேர்ந்த வர்த்தகர் உயிரிழந்துள்ளார்.

குறித்த நபர் புத்தளம், முந்தல் பிரதேசத்தில் உள்ள தனது கால்நடைப் பண்ணையில் மின் இணைப்புக்களைப் பழுது பார்த்துக் கொண்டிருக்கும் போதே மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளார்.

மின்சார இணைப்பில் ஏற்பட்ட மின் கசிவு காரணமாக இந்த மரணம் இடம்பெற்றிருக்கலாம் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கண்டி மாவட்டத்தில்

## டெங்கு அபாயம்; 1,621 பேர் அடையாளம்

■ மொஹொமட் ஆஸிக்

கண்டி மாவட்டத்தில் டெங்கு நோய் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக சுகாதார பிரிவு தெரிவித்துள்ளது.

சுகாதார அமைச்சின் தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு தெரிவிக்கையில் 2024 ம் ஆண்டு கடந்த 18 வாரங்களில் ( நான்கரை மாதம்) கண்டி மாவட்டத்தில் 1,621 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக தெரிவிக்கின்றது.

2023 ஆம் ஆண்டு இக் காலப் பகுதியில் கண்டி மாவட்டத்தில் அடையாளம் காணப்பட்டுள்ள டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை 1,440 ஆகும். அதன்படி இவ்வருடம் 181 நோயாளர்கள் அதிகரித்துள்ளதாகவும் அப் பிரிவு தெரிவிக்கின்றது.

இந்நிலையில் தற்போது நிலவுகின்ற அதிக மழை காரணமாக ஆங்காங்கே நீர்த் தேங்கி நிற்பதால், டெங்கு நுளம்பு பரவும் அபாயம் அதிகரித்துள்ளதாகவும் சுற்றாடலை சுத்தம் செய்து வைத்துக் கொள்ளுமாறும் சுகாதார பிரிவினர் பணித்துள்ளனர்.

எதிர்வரும் காலங்களில் சுகாதார அதிகாரிகள் வீட்டு சூழல்களை சோதிப்பதற்காக, வீடு வீடாக வர உள்ளதாகவும் நுளம்புகள் பரவும் விதத்தில் சூழலை வைத்திருப்போருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

## தடியால் தாக்கி நபர் படுகொலை



கொழும்பு 13, ஜம்பட்டா வீதியைச் சேர்ந்த 67 வயதுடைய நபரொருவர் இல்லத்தில் வைத்தே தடியால் அடித்துக் கொல்லப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பிரகாரம், உயிரிழந்த நபர் தனது வீட்டில் தனியாக வசித்து வந்ததாகவும், இவர் டி ஜெஸ்டின் பெர்னாண்டோ என அடையாளம் காணப்பட்டதாகவும் தெரியவந்துள்ளது.

குறித்த நபரின் வீட்டில் காயங்களுடன் அவரது உடல் கண்டெடுக்கப்பட்டது.

இனந்தெரியாத நபர் ஒருவர் வீட்டினுள் நுழைந்து தடியால் தாக்கி இப்படுகொலையை செய்துள்ளதாக பொலிஸார் சந்தேகிக்கின்றனர் .

இது தொடர்பிலான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது .

## பூசகரிடம் சுருட்டிய நகை மீட்பு

■ எஸ் .தில்லைநாதன்

சாவகச்சேரி பிரதேசத்தில் பூசகர் ஒருவரிடம் கொள்ளையடிக்கப்பட்ட ஒன்றரை பவுண் தங்க நகையை செவ்வாய்க்கிழமை (21) மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். இது தொடர்பில் கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டிற்கமைய சாவகச்சேரி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்த நிலையில், சங்கத்தானையை சேர்ந்த சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், கொள்ளைக்கு பயன்படுத்திய மோட்டார் சைக்கிளும் மீட்கப்பட்டுள்ளது.

கொள்ளையடிக்கப்பட்ட தங்க நகையினை உருக்கியவரும் கைது செய்யப்பட்டுள்ளதுடன் குறித்த இருவரையும் சாவகச்சேரி நீதிமன்றத்தில் முற்படுத்திய போது அவர்களை 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்ற நீதிபதி உத்தரவிட்டுள்ளார் .

மேலும், இச்சம்பவத்துடன் தொடர்புடையவர் என்ற ரீதியில் முல்லைத்தீவினை சேர்ந்த ஒருவர் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்து வருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர் .

## கடல் நீர் உள் வாங்கியதால் மன்னார் மக்கள் அச்சம்

■ றொசேரியன் லெம்பெட்

நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள வங்காலை வடக்கு மற்றும் மேற்கு பகுதிகளில் புதன்கிழமை (22) மதியம் திடீரென கடல் நீர் உள் வாங்கியது.

மன்னார் மாவட்டத்தில் புதன்கிழமை(22) அதிகாலை முதல் பலத்த காற்று வீசி வருகின்ற நிலையில் மீனவர்கள் கடற்தொழிலுக்கு செல்லவில்லை.

இந்த நிலையில் வங்காலை வடக்கு மற்றும் மேற்கு பகுதிகளில் திடீரென கடல் நீர் உள் வாங்கிய தோடு,கடற்கரையில் கட்டப்பட்டிருந்த படகுகள்





மற்றும் வலைகள் நீரில் மிதந்து உள்ளன.எனினும் படகுகளுக்கு எவ்வித சேதமும் ஏற்படவில்லை என மீனவர்கள் தெரிவித்தனர்.

திடீரென கடல் நீர் உள்வாங்கப்பட்டமையினால் வங்காலை மீனவர்கள் மற்றும் கிராம மக்கள் அச்சத்துக்கு உள்ளாகியுள்ளனர்.

இந்த நிலையில் வங்காலை பங்குத்தந்தை மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் குறித்த பகுதிக்குச் சென்று நிலைமையை பார்வையிட்டனர்.

## சுங் சியுங்-யுன் சபாநாயகர் சந்திப்பு



தென் கொரியாவின் ஊழல் எதிர்ப்பு மற்றும் சிவில் உரிமைகளுக்கான ஆணைக்குழுவின் உபதலைவரும் செயலாளர் நாயகமுமான சுங் சியுங்-யுன் தலைமையிலான உயர் அதிகாரிகள் அடங்கிய தூதுக்குழுவினர் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவை பாராளுமன்றத்தில் சந்தித்தனர்.

இதன்போது கருத்துத் தெரிவித்த சுங் சியுங்-யுன் ,கடந்த வருடம் இலங்கையில் நிறைவேற்றப்பட்ட ஊழல் எதிர்ப்புச் சட்டம் மிகவும் பலம் வாய்ந்த ஒரு சட்டம்.அத்துடன், இலஞ்சம் மற்றும் ஊழலைத் தடுப்பதற்கு தென் கொரியா வில்நடைமுறைப்படுத்தப்படும் பொது நிறுவனங்களுக்கான ஒருமைப்பாடு மதிப்பீட்டு முறைமையை இலங்கையிலும் அறிமுகப்படுத்துவதற்கு ஆதரவளிக்கத் தயாராக உள்ளதாக தெரிவித்தார்.

இதன் போது கருத்துத் தெரிவித்த சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனகுறிப்பிடுகையில், இலங்கையில் நிறைவேற்றப்பட்ட ஊழல் எதிர்ப்பு சட்டம் முற்றுமுழுதாககசுயாதீனமானது எனவும் அதன் மூலம் இலஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு சுயாதீனமான இயங்கக் கூடியதாக உள்ளது எனவும் தெரிவித்தார்.

இந்த சந்திப்பில் பாராளுமன்ற பதில் செயலாளர் நாயகம் சமிந்த குலரத்ன மற்றும் உதவிச் செயலாளர் நாயகம் ஹன்ஸ அபேரத்ன ஆகியோர் கலந்துகொண்டனர்.

அத்துடன், தென் கொரியாவின் ஊழல் எதிர்ப்பு மற்றும் சிவில் உரிமைகளுக்கான ஆணைக்குழுவின் பணிப்பாளர் லீ பீம் சியோக், பிரதிப் பணிப்பாளர் மூன் ஜோங்பில், உதவிப் பணிப்பாளர் செல்வி லீ கா யோன், இலங்கையின் இலஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் மேலதிக பணிப்பாளர் நாயகம் திருமதி எம்.ஆர்.வை.கே. உடுவெல மற்றும் திருமதி டபிள்யு. எம்.டி.டீ. பண்டார ஆகியோரும் இந்த சந்திப்பில் கலந்துகொண்டனர்.

## ஒரே சூழில் நான்கு சிசுக்கள் பிரசவம்

■ ரீ.எல்.ஜவ்பர்கான், எம்.எஸ்.எம் நூர்தீன் , கனகராசா சரவணன்

ஒரே சூழில் நான்கு சிசுக்களை பிரசவித்த முதல் சம்பவம் மட்டக்களப்பு போதனை வைத்தியசாலையின் வரலாற்றில் இடம்பெற்றுள்ளதாக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி கலா ரஞ்சனி தெரிவித்தார் .

மட்டக்களப்பு ஆரையம்பதி பிரதேச செயலக பிரிவை சேர்ந்த புது குடியிருப்பு கிராமத்தில் வசிக்கும் கிருஷ்ணவேணி என்னும் 25 வயதுடைய தாய் ஒருவரே இவ்வாறு ஒரே சூழில் நான்கு சிசுக்களை பிரசவித்துள்ளார். இதில் மூன்று பெண் சிசுக்கள் மற்றும் ஒரு ஆண் சிசு அடங்கும்

கடந்த மாதம் ஐந்தாம் திகதி குறித்த சிசுக்கள் பிரசவமான போதிலும் அவற்றை மிகவும் பாதுகாப்பான முறையிலும் ஆரோக்கியமான முறையிலும் வளர்த்து 48 நாள் சிசுக்களாக வளர்த்தெடுக்கப்பட்டன என்றும் அவர் தெரிவித்தார்.



## மின் விநியோகம் முற்றாக தடை


■ ஆ.ரமேஸ்

நாட்டில் ஏற்பட்டுள்ள தென்மேல் பருவபெயர்ச்சி காலநிலை மாற்றத்தினால் கடும் காற்று,பலத்த மழையூடான வானிலை மாற்றம் ஏற்பட்டுள்ளது.

நாடளாவிய ரீதியில் ஏற்பட்டுள்ள வானிலை மாற்றம் பல பிரதேசங்களில் பாதிப்புக்களை ஏற்படுத்தியுள்ளது.

இந்த நிலையில் நுவரெலியா மாவட்டத்தில் நுவரெலியா, வலப்பனை, கொத்மலை, ஹங்குராங்கெத்த, மற்றும் அம்பகமு ஆகிய பிரதேச செயலக பிரிவுகளில் தொடர்ச்சியான மழையும்,பலத்த காற்றும் வீசுகிறது.

இதன் காரணமாக வலப்பனை பிரதேசத்தில் செவ்வாய்க்கிழமை (21) முதல் இரண்டு நாட்களாக வீசும்



கடும் காற்றினால் வலப்பனை ரூபஹா, மற்றும் தெரிப்பெயே ஆகிய பிரதேசங்களில் வீதி ஓரங்களில் காணப்படும் பாரிய மரங்கள் மின்சார இணைப்பு வயர்கள் மீது சரிந்தும்,முறிந்தும் வீழ்ந்து மின் கம்பங்களும் உடைந்துள்ள நிலையில் இப் பிரதேசத்திற்கான மின் விநியோகம் முற்றாக தடைப்பட்டுள்ளது.

## பிலிப்பைன்ஸ் பெண் கொக்கெய்னுடன் கைது

இருபது கோடி ரூபாய் பெறுமதியான கொக்கெய்ன் போதைப்பொருளுடன் பிலிப்பைன்ஸ் நாட்டை சேர்ந்த 47 வயதான பெண்ணே கைது செய்யப்பட்டுள்ளார் என விமான நிலைய சுங்க போதைப்பொருள் கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது.

அவர் எத்தியோப்பியாவின் அடிஸ் அபாபா நகரிலிருந்து இந்த கொக்கெய்ன் தொகையை நாட்டிற்கு கொண்டு வந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அவர் தனது பயணப் பையினுள் மிளகாய் தூள், மஞ்சள் தூள், கோதுமை மா அடங்கிய 3 பொதிகளுடன், 2 கிலோகிராமுக்கும் அதிக கொக்கெய்ன் அடங்கிய 3 பொதிகளை மறைத்து கொண்டுவந்துள்ளதாக சுங்கப்பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

# தவறாக பயன்படுத்தும் அதிகாரமா? பொது மன்னிப்பு

இலங்கை வரலாற்றைப் பொறுத்தமட்டில், பொசன் நோன்மதி தினம், பொன் எழுத்துகளால் பொறிக்கப்பட்ட நாளாகும். இவ்வாறானதொரு நாளில்தான், மஹிந்த தேரர் இலங்கை தீவில் காலடி பதித்து, பௌத்தமத சிந்தனைகளை அறிமுகப்படுத்தினார்.

மஹிந்த தேரர், மிஹிந்தலைக்கு வருகைதந்துகொண்டிருந்த வேளையில், அங்கு ஆட்சியிலிருந்த தேவனம்பியதீசன் என்ற மன்னன், மான் ஒன்றை வேட்டையாடுவதற்கு முயன்றுள்ளார், அம்மானை, மன்னரிடமிருந்து உயிருடன் மஹிந்த தேரர் மீட்டெடுத்தார் என்பது வரலாற்றுச் சம்பவமாகும்.

அந்தப்பின்னணியைக் கொண்ட பொசன் தினத்தன்றும், ஜனாதிபதியால் கைதிகளுக்கு பொதுமன்னிப்பு வழங்கப்படுகின்றது. சிறு குற்றங்களைச் செய்தவர்கள், தண்டப்பணம் செலுத்த முடியாதவர்கள், வயது முதிர்ந்தவர்கள் என வகைப்படுத்தி, பொதுமன்னிப்பு வழங்கப்படும்.

ஜனாதிபதியின் பொதுமன்னிப்பு, பல தருணங்களில் 'அரசியல் ஆயுதம்' ஆகப் பயன்படுத்தப்பட்டுள்ளது என்றால் தவறில்லை. 1978ஆம் ஆண்டு, அரசியலமைப்புக்குப் பின்னர், இன்றைய நாள்வரையிலான மன்னிப்புகளைப் பார்க்கும்போது, அவை தெட்டத்தெளிவாகத் தெரிகின்றன.

1978ஆம் ஆண்டு அரசியல் அமைப்பின் 34ஆம் பிரிவின் ஊடாக, பொதுமன்னிப்பு வழங்குவதற்கான அதிகாரம், ஜனாதிபதியின் கீழ் கொண்டுவரப்பட்டது. 'ஜனாதிபதியின் பொது மன்னிப்பு', இந்நாட்டில், மிகத் தவறாகப் பயன்படுத்தப்பட்ட, தவறாகப் பயன்படுத்தப்படும் அதிகாரங்களில் ஒன்றாக இருக்கிறது.

பொது மன்னிப்புக்கான அளவுகோல்களுக்கு வரையறை இன்மையால், மேன்முறையீடுகளுக்கு அப்பாற்சென்று, பொதுமன்னிப்புகள் வழங்கப்படுகின்றன. இந்நிலையில்தான் நீதிமன்றத்தை அவமதித்த குற்றச்சாட்டின் குற்றவாளியாக இனங்காணப்பட்டு, தண்டனை வழங்கப்பட்டுள்ள, பொதுபல சேனாவின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசாரருக்கு பொதுமன்னிப்பு வழங்கப்படவேண்டும் என்று மாநாயக்க தேரர்கள் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். இலங்கை இந்து சம்மேளனமும் அதே கோரிக்கையை விடுத்துள்ளன.

நீதிமன்றத்தை அவமதித்த குற்றச்சாட்டின் கீழ் சிறைவைக்கப்பட்டிருந்த கலகொட அத்தே ஞானசார தேரருக்கு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பொதுமன்னிப்பு வழங்கியிருந்தார்.

அதன்பின்னர், 2016 ஆம் ஆண்டு கூரகல ரஜமஹா விகாரை தொடர்பான ஊடக விவாதத்தின் போது இன முரண்பாட்டை ஏற்படுத்திய குற்றச்சாட்டின் பேரில் கலபொட அதம்தே ஞானசார தேரருக்கு 2024 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 28ஆம் திகதி கொழும்பு நீதிமன்றம் நான்கு வருட சிறைத்தண்டனையை விதித்தது.

ஜனாதிபதி பொதுமன்னிப்பு வரையறுக்கப்படவேண்டும். மீண்டும், மீண்டும் அதே குற்றச்சாட்டுகளை புரிவோருக்கு மீண்டும், மீண்டும் பொதுமன்னிப்பை வழங்குவதன் ஊடாக, மீண்டுமொருதடவை அவ்வாறான குற்றங்களை புரியமாட்டார் என்பதற்கு எவ்விதமான உத்தரவாதமும் இல்லை. ஆகையால் நிபந்தனையுடன் பொதுமன்னிப்பு வழங்குவதே சிறந்தது.

இதேவேளை, விடுதலைக்காக பல வருடங்களாக ஏங்கிக்கொண்டிருக்கும் தமிழ் அரசியல் கைதிகளுக்கு பொதுமன்னிப்பு வழங்குவது தொடர்பிலும் நீதித்துறை அவதானம் செலுத்துமாயின், அதுவும் காலத்தால் போற்றப்படும் தீர்மானமாகவே இருக்கும் என்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை.

தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு
எழுதுங்கள்


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk






## வாழ்வியல் தரிசனம்

அழும் குழந்தையை அதட்டக் கூடாது. சுத்நதிரமும் இல்லாமல், வாழ வழியும் இல்லாத மக்களிடம் வீரம் பேசக்கூடாது. வீழ்ந்தனை உடைப்பதே பழக்கமான பொழுது போலாகிவிடும்.

ஆன்மீகம் அரசியலாக்கக்கூடாது. இதனை உணர்ந்தால் முழு உலகும் அன்பின் பிடிக்குள் உல்லாசமாகிவிடும். அடக்குவதில் என்ன ஆசை, என்ன பிடிப்பு?

தன்னையே முழுமையாக வழங்குதலே தியாகம். தனக்கு மட்டும் என எண்ணுவதே துரோகம்.

வசதிக்கேற்ற பேசுவதும் உண்மை எதுவெனத் தெரிந்தும் விதண்டாவாதம் புரிவதும் நியாயங்களுக்கு முரணானது.

எவரையும் ஸ்தம்பிக்கும் நிலைக்குள் தள்ளலாகாது. பரந்த உலகில், விரிந்த வானில் எழுந்து பறந்து வாழ எவர்க்குப் பிடிக்காது?

வாழ்வதற்கான முழு உரிமைகள் தங்களுக்கும், தங்கள் சகாக்களுக்கு மட்டுமே வேண்டும் என எண்ணி அதனையே செயலாற்ற முனையும் நபர்கள் ஏராளம்.

சந்தோஷங்கள் தமக்கேயானது. பிறர் அனுபவிக்கலாகாது. எனத் தமது செயலில் காட்டுகள் உலகம் ஏற்காது. அநியாயம் நிலைக்காது.

பருத்தியூர் பால- வயிரவநாதன்

# 'ஆப்பு' செருகவும் வாய்ப்பு

முருகானந்தம் தவம்

நாட்டில் முதலில் நடைபெறப்போவது ஜனாதிபதித் தேர்தலா ,பாராளுமன்றத் தேர்தலா என்ற எதிர்வு கூறல்கள் மாறி மாறி வெளியிடப்பட்டுவரும் நிலையில் அண்மையில் இலங்கையின் பிரஜாவுரிமையைக் கொண்டிருக்க வில்லை என்ற குற்றச்சாட்டில் இராஜாங்க அமைச்சராக இருந்த டயனா கமகே எம்.பி. பதவி வகிக்க தடைவிதித்து உயர் நீதிமன்றம் அறிவித்த தீர்ப்பு பிரதான எதிர்கட்சியான ஐக்கிய மக்கள் சக்திக்கு உற்சாகத்தையும் உத்வேகத்தையும் கொடுத்தாலும் அந்தத் தீர்ப்பே சில வேளைகளில் அவர்களுக்கு ' ஜனாதிபதி,பாராளுமன்றத் தேர்தல்களில் 'ஆப்பு'செருகவும் வாய்ப்பை ஏற்படுத்திக்கொடுக்க கூடிய சில காய் நகர்த்தல்கள் அரசியல் அரங்கிலே இடம்பெற்று வருகின்றன.

2019ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரான ரணில் விக்கிரமசிங்கவுக்கும் பிரதித்தலைவரான சஜித் பிரேமதசாவுக்கும் ஜனாதிபதி வேட்பாளர் யார் என்ற போட்டியில் கட்சியின் பெரும்பாலானவர்கள் சஜித் பிரேமதாசாவின் பக்கம் நின்றதால் ரணில் விக்கிரமசிங்க சஜித் பிரேமதாசாவுக்கு விட்டுக்கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. இதனையடுத்த அந்த ஜனாதிபதி தேர்தலில் பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ஷவை எதிர்த்து சஜித் பிரேமதாச போட்டியிட்டார் .இந்த நிலையில் கோட்டாபய ராஜபக்ஷ 69,24,255 வாக்குகளைப்பெற்று வரலாற்று வெற்றியை பதிவு செய்த போது சஜித் பிரேமதாச 55,64,239 வாக்குகளைப்பெற்று 13.60.016 வாக்குகளினால் தோல்வியடைந்தார்

இதனையடுத்து ஜனாதிபதி பதவி தான் கிடைக்கவில்லை. ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் பதவியையாவது கைப்பற்றுவோம் என நினைத்த சஜித் பிரேமதாச அதற்கான பல முயற்சிகளை எடுத்தபோதும் ,தந்திரங்கள், சூழ்ச்சிகளை மேற்கொண்டபோதும் அவை எதுவும் ரணில் விக்கிரமசிங்கவிடம் எடுபடாத நிலையில் ஐக்கிய தேசியக் கட்சியை பிளவுபடுத்தி புதிய கட்சியை ஒன்றை ஆரம்பித்து 2020 ஆம் ஆண்டு பாராளுமன்றத்தேர்தலில் போட்டியிட முடிவெடுத்தார்

2020 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் நடைபெறவிருந்த பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்கு அக்குறுகிய காலப் பகுதிக்குள் புதிய அரசியல் கட்சியொன்றை பதிவு செய்ய முடியாத நிலையால் சஜித் பிரேமதாச ஏற்கனவே தேர்தல்கள் ஆணைக்குழுவில் பதிவு செய்யப்பட்டிருந்த "அபே ஜாதிக பெரமுன" வைத் (எமது மக்கள் முன்னணி) தனது புதிய கட்சியாக தெரிவு செய்தார். இதன் பின்னர் அந்தக் கட்சிக்கு 'ஐக்கிய மக்கள் சக்தி' என்று பெயர் மாற்றி தன்னை கட்சியின் தலைவராகவும் ரஞ்சித் மத்தும பண்டாரவை பொதுச் செயலாளராகவும் அறிவித்தார்

மறைந்த முன்னாள் அமைச்சர்களான மங்கள சமரவீர மற்றும் ஸ்ரீபதி சூரியராச்சி ஆகியோர் அப்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டு பிரிந்து சென்ற பின்னர் இந்த "அபே ஜாதிக பெரமுன" என்ற கட்சியை உருவாக்கி பதிவு செய்து கொண்டனர் இதன் பின்னர் டயனா கமகே மற்றும் அவரது கணவரான ஓய்வு பெற்ற இராணுவ மேஜர் சேனக டி சில்வா ஆகியோர் இந்தக் கட்சியைத் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்திருந்தனர். அத்துடன் கட்சியின் ஸ்தாபகராக சேனக டி சில்வாவும் அவரது மனைவியான டயனா கமகே கட்சியின் செயலாளராகவும் பதவி வகித்தனர்.

அந்தக் கட்சியை சஜித் பிரேமதாச தனது வசமாக்கி ஐக்கிய மக்க சக்தி என்று பெயர் மாற்றிய நிலையில் அப்போது, இந்த "அபே ஜாதிக பெரமுன" கட்சியின் ஸ்தாபகராக இருந்த சேனக டி சில்வா. அந்தப் பொறுப்பிலிருந்து விலகி கட்சியின் தலைவராக சஜித் பிரேமதாசவை நியமித்தார். அப்போது கட்சியின் செயலாளராக இருந்த டயனா கமகே அந்தப் பதவியிலிருந்து விலகியதைத் தொடர்ந்து, ரஞ்சித் மத்தும "பண்டார அந்தப் பதவிக்கு நியமிக்கப்பட்டார்.

இந்த பதவி மாற்றம் 03-02-2020 அன்று இடம்பெற்றது இதற்கு பிரதியுபகாரமாக டயனா கமகே ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்றத்திற்கான தேசியப்பட்டியலில் சேர்க்கப்பட்டார். பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட்ட ஐக்கிய மக்கள் சக்தி 54 ஆசனங்களைப் பெற்றுக் கொண்டது.பாராளுமன்ற தேர்தல் முடிவுகளின் பின்னர் டயனா கமகே தேசியப்பட்டியல் எம்.பி.யாக பாராளுமன்றம் சென்றார். அத்துடன் சேனக டி சில்வா,டயனா கமகே ஆகியோர் கட்சியின் வாழ் நாள் உறுப்பினர்களாக இருந்தனர்

ஐக்கிய மக்கள் சக்தியின் தேசியப்பட்டியல் எம்.பி.யாக இருந்த டயனா கமகே 2020ஆம் ஆண்டு அப்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் அதிகாரங்களைப் பலப்படுத்தும் நோக்கில் கொண்டுவரப்பட்ட 20ஆவது அரசியலமைப்புத் திருத்தத்துக்கு கட்சியின் தீர்மானத்தை மீறி ஆதரவு வழங்கினார். இதனால் அவருக்கும் சஜித் பிரேமதாச தலைமையிலான கட்சிக்குமிடை யிலான உறவில் விரிசலும் முறுகலும் அதிகரித்தது.

இவ்வாறான நிலையில் சமூக செயற்பாட்டாளர் எனக் கூறிக்கொள்ளும் ஓஷல ஹேரத் என்பவர் நீதிமன்றத்திற்குச் சென்று டயனா கமகே பிரித்தானிய பிரஜையாக இருப்பதால் அவர் எம்.பி.யாக இருப்பதற்குத் தகுதி அற்றவர் என வழக்குத் தொடர்ந்தார். டயனா கமகே தனது பிரித்தானிய பிரஜாவுரிமையை துறந்தமைக்கோ அல்லது இரட்டைபிரஜாவுரிமை பெற்றமைக்கோ எந்த ஆதாரமும் இல்லை என அவர் வாதிட்டார். 2020 பாராளுமன்ற தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளராக இருந்தவர் தான் இந்த ஓஷல ஹேரத் . அந்தத் நேரத்தில் "அபே ஜாதிக பெரமுன"வின் உறுப்பினர்கள் தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்குச் சரியாக அறிவிக்கப்படவில்லை எனக் கூறி இவர் நீதிமன்றம் சென்றிருந்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தேசியப்பட்டியல் எம்.பி.யான டயனா கமகே இலங்கை பிரஜையா ?பிரித்தானிய பிரஜையா ?டயனா கமகே தனது பிரித்தானிய பிரஜாவுரிமையை துறந்தாரா? துறக்கவில்லையா ?இவர் எம்.பி.யாக இருக்க தகுதி இருக்கின்றதா? இல்லையா ?என்ற விடயங்கள் நீதிமன்றத்தில் விவாதங்களுக்குட்படுத்தப்பட்டு வந்த நிலையிலேயே 2022ஆம் ஆண்டு மக்கள் போராட்டங்களினால் ஜூலை மாதம் அப்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலகி அவருக்குப் பதிலாக ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க நியமிக்கப்பட்ட பின்னர் ஜனாதிபதி விக்கிரமசிங்கவினால் டயனா கமகே சுற்றுலா இராஜாங்க அமைச்சராக நியமிக்கப்பட்டார்.

இவ்வாறான நிலையிலேயே கடந்த மே 8ஆம் திகதி இராஜாங்க அமைச்சர் டயனா கமகே பாராளுமன்ற உறுப்பினர் பதவியை வகிக்க சட்டரீதியாக தகுதியற்றவர் என உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்தது .இந்த தீர்ப்பை பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி தமக்கு கிடைத்த பெரு வெற்றியாக கொண்டாடியது. ஆனால் உயர் நீதிமன்றத்தின் இந்த தீர்ப்பு எதிர்வரும் தேர்தல்களின் போது ஐக்கிய மக்கள் சக்திக்கு எதிராக மாறும் வாய்ப்பும் உள்ளது.

அதன் ஒரு கட்டமாகவே டயனா கமகேயின் கணவர் சேனக டி சில்வா ஐக்கிய தேசிய கட்சியின் உறுப்புரிமையை கொண்ட சில உறுப்பினர்கள் இன்றும் ஐக்கிய மக்கள் சக்தியில் உள்ளனர். ஐக்கிய மக்கள் சக்தியின் யாப்புக்கமைய கட்சியின் உறுப்பினர் ஒருவர் இரண்டு கட்சிகளின் உறுப்புரிமைகளை கொண்டிருக்க முடியாது இந்த "அபே ஜாதிக பெரமுன" எனும் அரசியல் கட்சியின் தலைமைத்துவத்தை நான் சஜித் பிரேமதாசவுக்கு வழங்கினேன். நான் சஜித் பிரேமதாசவிடம் கட்சியை ஒப்படைத்த போது, டயனா கமகே கட்சியின் செயலாளராக செயல்பட்டார்.இதனை தொடர்ந்து, ரஞ்ஜித் மத்தும பண்டாரவுக்கு குறித்த பதவியை வழங்குவதற்காக எனது மனைவி பதவி விலகியிருந்தார்.

நானும் எனது மனைவியும் கட்சியை யாருக்கும் விற்பனை செய்யவில்லை. இலங்கை மக்களுக்காக சேவையாற்றவும் கட்சியை முன்னோக்கி கொண்டு செல்வதற்காகவும் இவ்வாறாக கட்சியின் பொறுப்பை வேறு தரப்பினருக்கு வழங்கினோம். இந்த "அபே ஜாதிக பெரமுன" எனும் கட்சியே ஐக்கிய மக்கள் சக்தியாக பின்னர் பெயர் மாற்றப்பட்டது. இந்த நிலையில், கட்சியின் நிரந்தர உறுப்பினர்களான என்னையும் எனது மனைவியையும் யாராலும் கட்சியிலிருந்து நீக்க முடியாது.இந்த விடயம் தொடர்பான அடுத்த கட்ட நடவடிக்கைகள் குறித்த சட்ட ஆலோசனைகளை பெற்று வருகிறோம். அத்துடன், இந்த பிரச்சினை தீவிரமடையும் பட்சத்தில் சஜித் பிரேமதாச மற்றும் ரஞ்ஜித் மத்தும பண்டார ஆகியோரின் பதவிகளுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்ய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். இதன்மூலம் ஐக்கிய மக்கள் சக்தியின் கீழ் எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் சஜித் பிரேமதாசவால் போட்டியிட முடியாது" எனத் தெரிவித்துள்ளார்.

ஆகவே ஜனாதிபதித் தேர்தலோ ,பாராளுமன்றத் தேர்தலோ நடக்கும் பட்சத்தில் அரசியல் அழுத்தங்களினால் இந்த வழக்கு தீவிரப்படுத்தப்பட்டு சஜித் பிரேமதாச தலைவராகவும் ரஞ்சித் மத்தும பண்டார செயலாளராகவும் பதவி வகிக்க தடையோ அல்லது இடைக்காலத்தடையோ அல்லது ஐக்கிய மக்கள் சக்தி என்ற கட்சி ஜனாதிபதித் தேர்தலிலோ அல்லது பாராளுமன்றத் தேர்தலிலோ போட்டியிடத் தடையோ அல்லது இடைக்காலத் தடையோ நீதிமன்றத்தினால் விதிக்கப்படலாம். அவ்வாறு விதிக்கப்பட்டால் சஜித் பிரேமதாச தரப்பினரின் அரசியலே ஆட்டம் கண்டு விடும்.

ஏனெனில் அவ்வாறு தடையோ இடைக்காலத்தடையோ விதிக்கப்பட்டால் தேர்தலில் போட்டியிட குறுகிய காலத்திற்குள் சஜித் பிரேமதாச தரப்பினால் புதிய கட்சியொன்றை தம் வசமாக்குவது சிரமம் .அவ்வாறு தம் வசமாக்கினாலும் அதன் தேர்தல் சின்னத்தை மக்கள் மத்தியில் கொண்டு செல்வது என்பது அதனைவிடவும் சிரமம் என்பதனால் சஜித் பிரேமதாச -டயான கமகே தரப்பு மோதலை,வழக்கை ஆளும்தரப்பு தமக்கு சாதமாக மாற்றவே முயற்சிக்கும்.

இலங்கை நீதித்துறையில் அரசியல் அழுத்தங்கள் என்பது சர்வசாதாரணமாகி விட்ட நிலையில் சஜித் பிரேமதாச தரப்பினருக்கு தேர்தல் நேரத்தில் நெருக்கடிகளைக் கொடுப்பதற்காக ஐக்கிய மக்கள் சக்திக்கு தடையோ அல்லது இடைக்காலத்தடையோ அல்லது சஜித் பிரேமதாச -ரஞ்சித் மத்தும பண்டார ஆகியோரின் தலைவர்-செயலாளர் பதவிகளுக்கான விதிக்கப்படுவதற்கான தடையோ அல்லது இடைக்காலத்தடையோ விதிக்கப்படுவதற்கான "அரசியல் தீர்ப்புக்கள்" வழங்கப்படுவதற்கான வாய்ப்புக்கள் தாராளமாகவே உள்ளன . இது தொடர்பில் அரசியல் வட்டாரங்களில் பரவலாக பேசப்படுகின்றமையும் குறிப்பிடத்தக்கது. எவ்வாறெனினும் எதிர்காலம் பதில் சொல்லும்.

## கடிதங்கள்

# வாழ்வாதாரம் பாதிப்படைகிறது

எஸ்.ஆர்.லெம்பேட்

மன்னார்- தலைமன்னார் பிரதான வீதி நடுக்குடா பாவிலான்பாட்டன் குடியிருப்பு பகுதியில் தனியாருக்குச் சொந்தமான சுமார் 160 ஏக்கர் பனை மரங்களை கொண்ட காணிகள் சட்ட விரோதமான முறையில் இந்திய தனியார் கம்பெனி ஒன்றிற்கு கனிய மணல் அகழ்வுக்கு விற்பனை செய்யப்பட்டு ள்ளதாக பாதிக்கப்பட்டு வாழ்வாதாரத்தை இழந்து வரும் மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

குறித்த காணியில் உள்ள பல நூற்றுக்கணக்கான பனை மரங்கள் அழிக்கப்பட்டு கனிய மணல் அகழ்வு இடம் பெற நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

மேலும் குறித்த காணியின் உரிமையாளர்கள் அங்கு சென்ற நிலையில் பொலிஸார் கைது செய்வோம் என அச்சுரூத்துவதா கவும்இஅடாவடித்தனத்துடன் காணி அபகரிப்பு இடம் பெற்று வருவதாக பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்துள்ளனர்.

இவ்விடயம் தொடர்பில் அதிகாரிகள் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டுமென மக்கள் தெரிவிக்கின்றனர்.



# 22ஆவது DSI சுப்பர் ஸ்போர்ட் பாடசாலை கரப்பந்து சம்பியன்ஷிப் தொடர்பான அறிவிப்பு




**இலங்கையின் கரப்பந்தாட்ட வரலாற்றில் முக்கியமானதாக கருதப்படும் நிகழ்வான 22ஆவது DSI Supersport Schools Volleyball Championship ஐ ஆரம்பித்து வைப்பதற்கான அறிவிப்பை DSI விடுத்துள்ளது. கொழும்பு-நிப்போன் ஹோட்டலில் மே 07ஆம் திகதி நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு அறிவிக்கப்பட்டது. இலங்கை கரப்பந்து சங்கம் மற்றும் கல்வி அமைச்சின் பாடசாலை கரப்பந்து சம்மேளத்தின் ஆதரவுடன், நாட்டில் முன்னணி வகிக்கும் பாதணிகள் உற்பத்தியாளரான DSI இந்தப் போட்டிகளை ஒழுங்கமைத்து ஏற்பாடு செய்ய முன்வந்துள்ளது.**

இலங்கை கரப்பந்து சம்மேளனம் மற்றும் கல்வி அமைச்சுடன் இணைந்து 1999 ஆம் ஆண்டு DSI ஆல் ஆரம்பிக்கப்பட்ட இந்த சம்பியன்ஷிப் போட்டியின் நோக்கம் கிராமிய மற்றும் நகர்ப்புற கரப்பந்து வீரர்களுக்கு ஒரு வாய்ப்பையும் தேவையான ஆதரவையும் வழங்குவதுடன் அவர்களுக்கு தேசிய தரத்தில் ஒரு தளத்தையும் வழங்கி தேசிய மற்றும் சர்வதேச அரங்கில் அவர்களின் திறமைகளை வெளிக்காட்டவும். மேலும் அவர்களின் தொழில்சார் வாழ்க்கையினை மேம்படுத்த உதவுவதே இதன் நோக்கம் ஆகும். தொடக்க நிலையிலிருந்து மொத்தம் 198 அணிகள் இந்தப் போட்டியில் பங்கேற்கின்றன, பாடசாலைகளின் கரப்பந்து சம்பியன்ஷிப் கிட்டத்தட்ட 400 விளையாட்டு வீரர்களின் வளர்ச்சிக்கு பங்களித்துள்ளது. இந்த ஆண்டு, நாடு முழுவதிலுமிருந்து 4,000 இற்கும் மேற்பட்ட அணிகள் பங்கேற்கும் என ஏற்பாட்டாளர்கள் எதிர்பார்க்கின்றனர்.

இது தொடர்பில் துசித ராஜபக்ஷ, டி. சம்சன் அன்ட் சன்ஸ் (பிரைவேட்) லிமிடெட் நிறுவனத்தின் நிர்வாக பணிப்பாளர் தெரிவிக்கையில் "2024 DSI சுப்பர் ஸ்போர்ட் பாடசாலை







OMG Omnicom MediaGroup

கரப்பந்து சம்பியன்ஷிப்பின் 22ஆவது ஆண்டு நிறைவைக் குறிக்கும் என்பதால், DSI இற்கு முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வாக இது உள்ளது. நாடு முழுவதிலும் உள்ள பாடசாலைகளைச் சேர்ந்த இளம் விளையாட்டு வீரர்கள் மற்றும் பெண்கள், நமது நாட்டின் தேசிய விளையாட்டாக கரப்பந்தாட்டத்தை வளர்ப்பதிலும் பிரபலப்படுத்துவதிலும் DSI சுப்பர் ஸ்போர்ட் பாடசாலை கரப்பந்து சம்பியன்ஷிப் முக்கிய பங்கு வகிக்கும் என்பது எங்கள் நம்பிக்கையாகும்." எனக் கூறினார்.

2024 ஜூன் 15, 16, 22, 23, 29, 30, ஜூலை 06, 07, 13, 14, 20, 21, ஆகிய திகதிகளில் மாவட்ட மற்றும் தேசிய அளவில் இப்போட்டிகள் நடைபெறும். அந்தந்த அணிகளைச் சேர்ந்த மாவட்ட அளவிலான போட்டிகளில் முதல் மற்றும் இரண்டாம் இடங்களை வென்ற வீரர்கள் தேசிய அளவிலான போட்டிக்கு தகுதி பெறுவார்கள். தேசிய அளவிலான போட்டிகள் 2024, ஒகஸ்ட் 07 முதல் 11 வரை நடைபெறும். இறுதிப் போட்டிகள் 2024 நவம்பர் 02, 03 இல் கொழும்பு சுகததாச உள்ளக விளையாட்டு மைதானத்தில் நடைபெறும்.

வயதுப் பிரிவுகளின் அடிப்படையில் 11 வயதுக்குட்பட்ட ஆண், பெண், 13 வயதுக்குட்பட்ட ஆண், பெண், 15 வயதுக்குட்பட்ட ஆண், பெண், 17 வயதுக்குட்பட்ட ஆண், பெண், 19 வயதுக்குட்பட்ட ஆண், பெண் என போட்டிகள் பிரிக்கப்பட்டுள்ளன.

போட்டிக்கான விண்ணப்பங்கள் நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து DSI காட்சியறைகளிலும் கிடைக்கும்.

> **பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை அருகில் உள்ள DSI காட்சியறைகளில் சமர்ப்பிக்க முடியும். சந்தைப்படுத்தல் பிரிவு இல. 257, ஹைலெவல் வீதி, நாவின்ன, மஹரகம எனும் முகவரிக்கு விண்ணப்பங்களை அனுப்பி வைக்கவும் முடியும். விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதி 2024 மே 31 ஆகும்**

மேலதிக விபரங்களுக்கு, விண்ணப்பதாரர்கள் 011-2669344 எனும் இலக்கத்துடன் இலங்கை கரப்பந்து சம்மேளனத்தை தொடர்பு கொள்ளலாம். 25 மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள், செயலாளர் - பாடசாலை கரப்பந்து சங்கம் ஆகியன 0773329702 எனும் இலக்கத்துடன் சி.எல். குமாரவை தொடர்பு கொள்ளவும். அல்லது இலங்கை கரப்பந்து சம்மேளனத்தின் பொதுச் செயலாளர் ஏ.எஸ். நாலகவை asnalaka@gmail.com எனும் முகவரி மூலம் தொடர்பு கொள்ளலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை அருகில் உள்ள DSI காட்சியறைகளில் சமர்ப்பிக்க முடியும். சந்தைப்படுத்தல் பிரிவு இல. 257, ஹைலெவல் வீதி, நாவின்ன, மஹரகம எனும் முகவரிக்கு விண்ணப்பங்களை அனுப்பி வைக்கவும் முடியும். விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதி 2024 மே 31 ஆகும்.

# சர்வதேச தேயிலை தினம்



பன்னாட்டுத் தேயிலை நாள் (International Tea Day) ஐக்கிய நாடுகள் சபையினால் ஆண்டுதோறும் மே மாதம் 21 அன்று கொண்டாடப்படும் இது தொடர்பான தீர்மானம் 2019 டிசெம்பர் 21 அன்று ஏற்றுக்கொள்ளப்பட்டு, இதற்கான நாளை அனுசரித்து வழிவகுக்க ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் வேளாண்மை அமைப்புக்கு அழைப்பு விடுக்கப்பட்டது.

தேயிலையின் நீண்ட வரலாறு, ஆழமான கலாசார, பொருளாதார முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. தேயிலையின் நிலையான உற்பத்தி, அதன் நுகர்வுக்கு ஆதரவான செயல்பாடுகளைச் செயல்படுத்துவதற்கும், பசி மற்றும் வறுமையை எதிர்த்துப் போராடுவதில் அதன் முக்கியத்துவத்தைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்குமான கூட்டு நடவடிக்கைகளை ஊக்குவிப்பதும் வளர்ப்பதும் இந்த நாளின் குறிக்கோளாகும்.

இந்தியா, இலங்கை, நேபாளம், வியட்நாம், இந்தோனேசியா, வங்காளதேசம், கென்யா, மலேசியா, உகண்டா,








தான்சானியா, ஆகிய தேயிலை உற்பத்தி செய்யும் நாடுகளில் 2005-ஆம் ஆண்டு முதல் டிசெம்பர் 15 அன்று பன்னாட்டுத் தேயிலை நாள் கொண்டாடப்பட்டு வருகிறது சர்வதேச தேயிலை தினம் தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகள் மீதான உலகளாவிய தேயிலை வணிகத்தின் தாக்கத்தை அரசாங்கங்கள் மற்றும் குடிமக்களின் உலகளாவிய கவனத்தை ஈர்ப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. அத்துடன், விலை ஆதரவு, நியாய வணிகம் ஆகியவற்றுக்கான கோரிக்கைகளுடன் இந்நாள் இணைக்கப்பட்டுள்ளது

2001 ஆம் ஆண்டில் உலக நாடுகளின் அரசு சார்பற்ற அமைப்புகள், மற்றும் தொழிற்சங்கங்கள் இணைந்து உலக சமூக மாமன்ற மாநாட்டை பிரேசிலில் நடத்தின. இதன் விளைவாக 2003 இல் உலக சமூக மாமன்றத்தின் ஆசிய மாநாடு இந்தியாவில் ஐதராபாத்தில் நடைபெற்றது. இம்மாநாட்டில் இலங்கை, இந்தியத் தேயிலைத் தோட்டத் தொழிற்சங்கத் தலைவர்கள் கலந்து கொண்டனர். இதன் போது, 2004 ஆம் ஆண்டு மும்பை மாநாட்டில் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் பிரச்சினை தொடர்பாக தனியான மாநாடு ஒன்று நடத்துவது என்று முடிவெடுக்கப்பட்டது.

2004 மும்பை மாநாட்டில் பன்னாட்டுத் தேயிலைத் தொழிலாளர்களின் பிரச்சினை ஏனைய தொழிற்துறை சார்ந்த தொழிலாளர்களின் பிரச்சினைகளில் இருந்து வேறுபட்டது என அடையாளம் காணப்பட்டது. இவர்களது பிரச்சினைகளை வெளிப்படுத்த தனித்துவமான தினத்தின் அவசியம் குறித்து உடன்பாடு எட்டப்பட்டது. பிரித்தானியாவின் முதலாவது இந்திய அசாம் தேயிலைத் தோட்டத்தில் சீன ஒப்பந்தத் தொழிலாளர்கள் 1838 டிசெம்பர் 15 இல் மேற்கொண்ட முதலாவது சம்பளப் போராட்டத்தின் நினைவாக ஆண்டு தோறும் டிசெம்பர் 15 இல் இந்நாளைக் கொண்டாடுவதென 2005 ஆம் ஆண்டில் பிரேசிலில் நடந்த மாநாட்டில் முடிவு செய்யப்பட்டது

முதலாவது பன்னாட்டுத் தேயிலை நாள் 2005 டிசெம்பர் 15 இல் புதுடெல்லியில் நடைபெற்றது. இரண்டாவது பன்னாட்டு நாள் 2006 டிசெம்பர் 15 இல் இலங்கையில் கண்டியிலும், 2008 இல் மீண்டும் இலங்கையில் நடைபெற்றது. பன்னாட்டுத் தேயிலை நாள் கொண்டாட்டங்கள் ஊடாக நடைபெறும் பன்னாட்டு மாநாடுகளை தேயிலைத் தொழிசங்க இயக்கங்கள் முன்னெடுக்கின்றன.

2015-ஆம் ஆண்டில், இந்திய அரசு பன்னாட்டுத் தேயிலை நாளை ஐ.நா உணவு, வேளாண்மை அமைப்பின் மூலம் விரிவுபடுத்த முன்மொழிந்தது.

தேயிலை மீதான ஐநா உணவு, வேளாண்மை அமைப்பு உலக தேயிலை பொருளாதாரத்தை ஆதரிப்பதற்கான பலதரப்பு முயற்சிகளுக்கு வழிவகுக்கிறது, இது பன்னாட்டுத் தேயிலை நாளை அறிவிப்பதற்கான சிறந்த நிறுவனமாக இருந்து வருகிறது. 2015 ஆம் ஆண்டில், இத்தாலியின் மிலான் நகரில் நடந்த சந்திப்பின் போது, தேயிலை பற்றிய ஐநா உணவு, வேளாண்மை அமைப்பு சர்வதேச தேயிலை தின யோசனை பற்றி விவாதிக்கப்படு, 2019 டிசெம்பரில் ஐக்கிய

> **சர்வதேச தேயிலை தினம் ஆனது பல்லுயிர் பாதுகாப்பின் முக்கியத்துவத்தை நினைவூட்டுகிறது மற்றும் சுற்றுச்சூழல் நிலைத்தன்மையை மேம்படுத்துகிறது. இந்த சர்வதேச தேயிலை தினத்தை நண்பர்கள் மற்றும் குடும்பத்தினருடன் கொண்டாடலாம்**

நாடுகள் பொதுச் சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

தேயிலை தொழிற்துறையின் பங்களிப்பை அங்கீகரித்து நியாயமான வர்த்தகம் மற்றும் முதலீட்டை ஊக்குவிப்பதற்காக இந்த நாள் அர்ப்பணிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச தேயிலை தினமானது தேயிலை மற்றும் தேயிலை தொழிலில் பணிபுரிபவர்களுக்கு மரியாதை செலுத்தும் விதமாக ஒவ்வொரு ஆண்டும் கொண்டாடப்படுகிறது. தேயிலை தொழிலில் உள்ளவர்களின் கஷ்டங்கள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்த இந்த நாள் உருவாக்கப்பட்டது.

தொழிலாளர்களின் நலனை கருத்தில் கொண்டு உருவாக்கப்பட்ட இந்த நாள் மிகவும் முக்கியமானது மற்றும் ஒவ்வொருவரும் இதில் பங்கேற்க வேண்டும். சர்வதேச தேயிலை தினம் ஆனது முதலில் 2005ம் ஆண்டு கொண்டாடப்பட்டது.

ஆசியா மற்றும் ஆப்பிரிக்காவில் உள்ள தொழிற்சங்கங்கள், சிறு தேயிலை விவசாயிகள் மற்றும் சமூக அமைப்புகளால் இந்த நாள் தொடங்கப்பட்டது. தேயிலை தொழிலில் உள்ளவர்களின் ஊதியம் மற்றும் நியாயமான விலைகள் கிடைக்க இந்த நாள் நிறுவப்பட்டது.

சர்வதேச தேயிலை தினத்திற்கு உத்தியோகபூர்வ அந்தஸ்து எதுவும் இல்லை என்றாலும், தேயிலை உற்பத்தியாளர்கள் மற்றும் தொழிலாளர்களின் வேலை நிலைமைகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த கொண்டாடப்பட்டு வருகிறது.

சர்வதேச தேயிலை தினம் ஆனது பல்லுயிர் பாதுகாப்பின் முக்கியத்துவத்தை நினைவூட்டுகிறது மற்றும் சுற்றுச்சூழல் நிலைத்தன்மையை மேம்படுத்துகிறது. இந்த சர்வதேச தேயிலை தினத்தை நண்பர்கள் மற்றும் குடும்பத்தினருடன் கொண்டாடலாம்.

இந்த சர்வதேச தேயிலை தினத்தில் நீங்கள் உலகில் உள்ள பல்வேறு வகையான டீயை குடித்து ருசி பெறலாம். நீங்கள் இதுவரை முயற்சி செய்யாத டீ வகைகளை முயற்சி செய்து பாருங்கள்.

இலங்கையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்வு, ஈரானிய ஜனாதிபதி ரைசியின் மறைவை அடுத்து இரத்துச்செய்யப்பட்டது. எனினும், தேயிலைத்துறைசார் அமைப்புகள், தொழிலாளர்களின் உரிமைக்காக குரல்கொடுத்தமை குறிப்பிடத்தக்கது

## இலங்கையில் பல மதத் தலங்களின் வரலாறு

# எப்படி அழிக்கப்படுகிறது?



**ஜே.ஏ.ஜோர்ஜ்**



**நேற்றைய தொடர்ச்சி...**

"காலா காலமாக தமிழர்கள் வழிபடும், சிங்கள மக்கள் சொந்தம் கொண்டாடும் இடங்களில் முன்னர் பௌத்தம் இருக்கவே இல்லை என தமிழ் மக்கள் வாதிடுவது பிழையானதாகவே இருக்கும். ஏனென்னால் தமிழ் மக்கள் பல நூற்றாண்டுகளுக்கு முன்னதாக சமணம், வைணவம், பெத்தளம் உள்ளிட்ட மதங்களை பின்பற்றியமைக்கு வரலாற்று ஆதாரங்கள் உள்ளன. எனவே, பௌத்தம் என்பது பொதுவானது. தமிழர்களும் வழிப்பட்டு உள்ளனர். அதில் பிரச்சினை இல்லை. ஆனால், சிங்கள பௌத்தம் என்று தனியுரிமை கொண்டாடும் போது அங்குதான் பிரச்சினை தீவிரமாகின்றது. ஏனென்றால் தமிழ் மக்கள் காலம் காலமாக வழிபட்டு வந்த இடங்களை திடீரென பறிக்க முயல்வது பாரிய பின்விளைவுகளுக்கு வழியினை ஏற்படுத்தி விடும்." என்கிறார் ஆய்வாளர் என்.சரவணன்.

எல்லாள மன்னனுடன் யுத்தத்துக்கு புறப்பட்ட துட்டகைமுனு மன்னன், கதிர்காமத்தில் உள்ள முருகனிடம் வழிபாடு செய்ததுடன், யுத்தத்தில் வெற்றிப்பெற்றால் கோவில் கட்டுவதாக நேர்த்திக்கடன் செய்து சென்றதாகவும், பின்னர் யுத்தத்தில் வென்று விகாரைகள் கட்டியதுடன், கதிர்காம கந்தனுக்கு கோவில் கட்டியதாக வரலாற்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

அவ்வாறு பார்க்கும் போது அந்த காலப்பகுதியில் இருந்து சிங்கள மக்களும் கதிர்காம முருகனை வழிப்பட்டு வந்துள்ளதாக தெரிகின்றது. எனினும், எல்லாள மன்னனே கதிர்காம முருகனிடம் நேர்த்திக்கடன் வைத்தாக கூறப்படுவதால் அதற்கு நீண்ட காலத்துக்கு முன்பிருந்தே அங்கு மக்கள் முருகனை வழிப்பட்டு வந்திருக்க வேண்டும். எனவே அங்கு தமிழ் மக்கள் நீண்ட காலமாக வாழ்ந்து வந்துள்ளதாக பார்க்க முடியும். அத்துடன், அங்கு தமிழர்கள் முன்னெடுத்த வழிபாடுகள் இல்லாதொழிக்கப்பட்டு முழுமையாக சிங்கள பௌத்தம் ஆக்கிரமித்துள்ளதால்தான் சிக்கலான நிலையொன்று ஏற்பட்டுள்ளது.

ஏனென்றால், நாட்டின் அனைத்து பகுதிகளில் இருந்தும் தமிழ் மக்கள் கதிர்காமத்துக்கு சென்று வழிபட்டு வருகின்றனர். அதிலும் கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பில் இருந்து காட்டு வழியில் கால்நடையாக சென்று கதிர்காம கந்தனை வழிப்பட்டு வரும் பாரம்பரியம் இன்றும் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது.

இதேவேளை, வடக்கு - கிழக்கில் சனத்தொகை விகிதாசாரத்தை மாற்றவும் தமிழர்கள் தமது நிலங்களுக்கு செல்வதை தடுக்கவும் அபிவிருத்தி திட்டங்கள் என்ற போர்வையில் தமிழர் பிரதேசங்களில் திட்டமிடப்பட்ட சிங்கள குடியேற்றங்கள் முன்னெடுக்கப்படுவதாக தொடர்ந்தும் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

"நீர்ப்பாசன திட்டங்கள், இராணுவ குடியேற்றங்கள், தொல்பொருள் இட ஒதுக்கீடுகள், வனவிலங்கு சரணாலயங்கள், வனப்பகுதி மற்றும் விசேட பொருளாதார வலயங்கள் என்பவற்றின் மூலம் வடக்கு மற்றும் கிழக்கில் நில அபகரிப்பானது 2019ஆம் ஆண்டு ஆட்சி மாற்றத்துக்கு பின்னர் மேலும் மோசமடைந்துள்ளது"என இலங்கையின் மனித உரிமைகள் தொடர்பில் தொடர்ச்சியாக கண்காணிப்பு செய்து ஆய்வு அறிக்கைகளை வெளியிட்டுவரும் அமெரிக்காவை தளமாகக் கொண்ட ஒக்லாந்து நிறுவனத்தின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதை இங்கே சுட்டிக்காட்டலாம்.

அறிக்கைக்கான ஆராய்ச்சியை ஒருங்கிணைத்து செயற்பட்ட ஒக்லாந்து நிறுவனத்தின் நிறைவேற்று பணிப்பாளர் அனுராதா மிட்டல், "தமிழர்கள் அவர்களது பரம்பரை நிலங்களை பயன்படுத்த அனுமதி மறுப்பது, கிராமங்களின் பெயரை மாற்றுவது, தேவாலயங்கள் மற்றும் இந்து கோவில்களை பௌத்த விகாரைகளாக மாற்றுவது சிங்கள மேலாண்மையை நிலைநாட்டும் நினைவுச்சின்னங்களை நிறுவுவது போன்றவை தமிழர் வரலாறு மற்றும் கலாசாரத்தை அழிக்கும் ஓர் ஒருங்கிணைக்கப்பட்ட முயற்சி" என அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

"மிகவும் பழமைவாய்ந்த தமிழர்களின் அடையாளமான திருகோணேஸ்வரத்தை அரசியலுக்குள் புகுத்தி அனைத்து அரசியல்வாதிகளும் சின்னபின்னமாக்கி உள்ளதாக" திருகோணமலையை சேர்ந்த சமூக ஆர்வலரான பொன்னுதுரை சற்சிவானந்தம் தெரிவிக்கின்றார்.

"2007ஆம் ஆண்டுக்கு பிறகு, இங்குள்ள சிங்கள அரசியல்வாதிகளும், அரசாங்க தரப்பினரும் இரத்தினபுரியில் வாழ்ந்த சிங்கள மக்களுக்கு தவறான பின்னூட்டங்களை வழங்கி தொழில்முயற்சியாளர்களாக அழைத்து வந்து தமிழர்களின் இருப்பினை கேள்விக்குறியாக்கியுள்ளனர். திருகோணமலையில் எத்தனையோ இடங்கள் இருந்தாலும் அதனை விடுத்து அவர்களை இந்த புனிதமான ஆலய சூழலில் வியாபார நடவடிக்கையில் ஈடுபடுத்தியது தவறான விடயமாகும். தமிழர்களின் தலைநகரான திருகோணமலையில் உள்ள திருகோணேஸ்வரத்தின் புனித தன்மையை பாதுகாப்பதுடன், தமிழ் மக்களின் வழிபாட்டு உரிமையை எதிர்காலத்திலும் உறுதிசெய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்றார்.

2001ஆம் ஆண்டு இங்கு தான் வந்தபோது 3 கடைகள் மாத்திரமே இருந்ததாக கூறும் லிங்கேஸ்வரி, தற்போது 56 கடைகள் இங்கு உள்ளதாக கூறுகின்றார். மூன்று பிள்ளைகளின் தாயரான, பெண் தலைமைத்துவ குடும்பத்தை சேர்ந்த லிங்கேஸ்வரி, அங்குள்ள நான்கு கடைகள் மாத்திரமே தமிழர்களின் கடைகள் என்றும் தமிழ் வியாபாரிகள் பாரபட்சமாக நடத்தப்படுவதாகவும் குற்றம் சுமத்துகின்றார்.

"எங்களது கடைகளுக்கு மின்சார வசதி செய்து கொடுக்கப்படவில்லை. இதற்கு காரணம் என்னவென்று தெரியாது. திருவிழா காலங்களில் சிங்கள வியாபரிகளின் கடைகள் உள்ள பகுதிகளில் மின்சார வசதிகள் செய்து கொடுக்கப்படும். ஆனால், தமிழ் வியாபாரிகளுக்கு அந்த வசதி இருக்காது. நான் இந்த கடையை ஆரம்பித்து 23 வருடங்கள் ஆகின்றன. இந்த 23 வருடத்திலும் எனக்கு மின்சாரம் வழங்கப்படவில்லை. எங்கள் மீது ஏன் இந்த பாரபட்சம் என்று தெரியவில்லை. நாங்கள் இது தொடர்பில் கேள்வி எழுப்பினால் வேறு விதத்தில் பழிவாங்கப்படுவோம்." என்று தனது இயலாமையை வெளிப்படுத்துகின்றார்.

> **"திருகோணேஸ்வரத்திலும் இதே நிலைதான், அதிகளவில் தமிழ் மக்கள் வாழ்ந்த அங்கு இன்று சிங்கள குடியேற்றங்கள் திட்டமிட்டு நிகழ்த்தப்பட்டுள்ளன. இந்த நிலை தொடர்ந்தால் எதிர்காலத்தில் கதிர்காமத்துக்கு ஏற்பட்ட நிலை ஏற்படலாம். அதற்கு வாய்ப்பு உள்ளது"**



திருகோணமலை, சேருநுவரவை சேர்ந்த கருணாரத்தன என்ற சிங்கள் வியாபாரி, இங்கு 2003ஆம் ஆண்டில் இருந்து கடையொன்றை நடத்தி வருவதாக தெரிவிக்கின்றார். எனினும், இங்கு கடையை அமைக்க இடமளிக்கப்பட்ட பின்னர் இத்தனை வருடங்களாக தமக்கு வேறு எந்த உதவிகளையும் அரசாங்கம் செய்யவில்லை என்று கூறுகின்றார்.

"திருகோணேஸ்வரத்திலும் இதே நிலைதான், அதிகளவில் தமிழ் மக்கள் வாழ்ந்த அங்கு இன்று சிங்கள குடியேற்றங்கள் திட்டமிட்டு நிகழ்த்தப்பட்டுள்ளன. இந்த நிலை தொடர்ந்தால் எதிர்காலத்தில் கதிர்காமத்துக்கு ஏற்பட்ட நிலை ஏற்படலாம். அதற்கு வாய்ப்பு உள்ளது. இவை அனைத்தும் ஏற்கெனவே திட்டமிட்ட வரைப்படத்தின் அடிப்படையில் முன்னெடுக்கப்படுகின்றன" என்று ஆய்வாளர் என்.சரவணன் சுட்டிக்காட்டுகின்றார்.

"யுத்தம் முடிவடைந்த பின்னர், புதிய விகாரைகள் கட்டப்பட்டன, தமிழர்கள், முஸ்லிம்கள் மற்றும் கிறிஸ்தவர்களின் மத உரிமைகள் மறுக்கப்பட்டு, புத்த மதத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. இவை அனைத்தும் தொல்பொருள் திணைக்களத்தின் முழு ஆசீர்வாதத்துடன் நடைபெறுகின்றன. வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமிழர்களின் கோயில்கள், நிலங்கள், புராதன சின்னங்கள் பௌத்தமயமாக்கப்பட்டுள்ளன. தமிழர் பகுதியில் விகாரைகள் ஏன்?

தொடரும்

# பலிக்குப் பலி



**இரா. சிவலிங்கம்**
**கொட்டகலை**



மாலை ஐந்து மணியிருக்கும் தோட்டத் தொழிலாளர் பெண்கள் வேலை முடிந்து வீட்டை நோக்கி வந்து கொண்டிருந்தார்கள். சிலரின் தலையில்மாட்டுக்கு புல்லு கட்டு,விறகுக் கட்டு, பிள்ளை மடுவத்திலிருந்து பிள்ளையுடனும் வருகின்றார்கள். மூக்காயி வீட்டு வாசலில் நீல நிறக் கார் நிற்கின்றது. அதனைச் சுற்றி லயத்துச் சிறுவர்கள் நிற்கின்றார்கள். யாரது நம்ம வீட்டுக்கு காரில் வருவது என நோசித்துக் கொண்டே கொழுந்துக் கூடையை ஆனியில் மாட்டி விட்டு உள்ளே செல்கின்றாள்.

வீட்டில் இரண்டு பேர் அமர்ந்து தன் கணவனோடு பெசிக்கொண்டிருக்கின்றார்கள். உள்ளே நுழைந்த மூக்காயியைப் பார்த்து இருவரும் வணக்கம் சொன்னார்கள். இருவரது கைகளிலும் சோடாப் போத்தல் இருந்தது.

மூக்காயி தன் கணவர் சேகரை கூப்பிட்டு என்னங்க விசயம் என வினாவுகின்றாள். இல்ல புள்ள நம்ம பெரிய பய சதீஸ்ஸ அவங்க வீட்டுக்கு வேலைக்கு கூப்பிடுறாங்க. அவருக்கு இரண்டு மகள்மார்கள் மட்டுமதான் இருக்காங்களாம். அவங்க பெரிய ஸ்கூல படிக்கிறாங்களாம். லீவுக்கு மட்டுமதான் வீட்டுக்கு வருவாங்களாம்.

மாத்தியாவும், நோனாவும் வேலைக்கு போயிருவாங்களாம். நம்ம மகனை வீட்ட மட்டும் பார்த்துக்கிட்டு இருந்தா போதுமுனு சொல்றார். நல்ல சம்பளம் கொடுப்பாராம். இந்தா பாரு இப்பக்கூட ஐந்தாயிரம் ரூபாய் கொடுத்தாரு. அவருக்கு நல்ல மனசு புள்ள.

புள்ளய அவங்க புள்ளய மாதிரி பார்த்துக்குவாங்களாம். இவன்தான் ஒழுங்கா ஸ்கூலும் போகமாட்டிங்ரா, படிப்பும் ஏறுதுல, இந்த மொரயும் பெயிலாயிட்டான்.

பலி கொடுக்கப் போகும் ஆட்டுக் குட்டியைப் போல சதீஸ் அந்த வீட்டு மூலையில் நின்று கொண்டிருந்தான்.

திடீரென கொழும்புக்கு வீட்டு வேலைக்கு போ என, அப்பா சொன்னதும் சதீஸ்சுக்கு என்ன சொல்வதென்று புரியாமல் வாயடைத்து நின்றான். தாய்க்கு தன் மகனை அனுப்ப கொஞ்சம் கூட இஸ்டம் இல்லை. இருக்க கஞ்சியை குடித்தாவது,புள்ளயப் டிக்க வைப்போம் என கணவனுடன் தகராறு பன்னுகிறாள். கிடைத்த காசில் கணவன் குடித்து இருந்ததையும் சீலம் கவனிக்கத் தவறவில்லை.

உனக்கு ஒன்னும் தெரியாது நீ வாய மூடிக்கிட்டு சும்மா இரு. இந்த எடத்த உட்டுட்டா வேற எடம் இப்படி கெடைக்காது. இவர்கள் பேசியதை அவதானித்த மாத்தியா, எழுந்து நின்று அம்மா கவலைப்பட வேணா, நா ஒங்க புள்ளய நல்லாப் பார்க்கறது. அத படிக்க வைக்கறது. நல்லா வளர்க்றது. அது இங்க மாதிரி இருக்காது. நம்ம பங்களாவுல இவரு மட்டும்தான் இருக்கப் போறது. நமக்கு ஆம்பள புள்ள இல்லத்தானே.

இவன நம்ம புள்ள மாதிரி பார்க்றது. என சொல்லிக் கொண்டே ஒரு ஆயிரம் ரூபாய் நோட்டை சீதையம்மாளிடம் மாத்தியா கொடுக்கிறார்.

> **சகல வீட்டுப் பொறுப்புக்களையும் சதீஸ் செய்து கொண்டிருக்கின்றான். சுவாதியை மறக்க முடியாத நிலைக்கு சதீஸ் தள்ளப்பட்டான். அவளும் இவன் மேல் பாசத்ததைப் பொலிந்தால். தன் வீட்டுக்கு வேலைக்கு வந்தவனைப் போல நடத்த வில்லை.**

சீதையம்மாளின் கண்களில் இருந்து மலமலவென கண்ணீர் வருகின்றது. மகனைக் கட்டிப்பித்து ஓவென அழத் தொடங்கி விட்டாள். சதீஸ் இருந்த உடுப்புக்களை எடுத்தக் கொண்டு அன்று இரவு ஏழு மணியளவில் காரின் பின் சீட்டில் அழுது கொண்டே அமர்ந்து இருக்கின்றான். கார் தோட்டத்தை விட்டு புறப்படுகிறது. மகனை வேளைக்கு அனுப்பிவிட்டோமே என தாய் கதறி அழுகின்றாள்.

காலங்கள் ஓடி மறைகின்றன. சதீஸ்சுக்கு இப்ப கல்யாணம் செய்யும் வயது. கொழும்புக்குப் போன இரண்டு, மூன்று வருடங்கள் அடிக்கடி வருவதும் தாய், தந்தையை பார்ப்பதும் காசு அனுப்புவதுமாக இருந்தான்.

சதீஸ் இருபத்தைந்து இளைஞன் நல்ல உடல்வாகு. நகர நாகரிகங்கள் எல்லாம் அவன மேனினியிலும், நடையுடை பாவனையும் இருந்தன. ஒரு சினிமா நடிகனைப் போல அந்த வீட்டில் வளர்ந்தான். எல்லாப் பொறுப்பும் சதீஸ்சுக்குத்தான். அநத் வீட்டில் இருந்த இரு பெண் பிள்ளைகளையும் பாடசாலைக்கு அழைத்துச் செல்வதும் மீண்டும் அழைத்து வருவதும் அவனுடைய வேலைகளில் ஒன்றாக இருந்தது. சதீஸ் கார் ஓட்டவும் கற்றுக் கொண்டான்.

இப்போதெல்லாம் சதீஸுக்கு வீட்டு நினைவு வருவது குறைந்து விட்டது. தன்னுடைய குடும்பம்,தோட்டம், நண்பர்கள் எல்லாம் மறந்துவிட்ட நிலையில் அந்த வீட்டிலேயே ஒரு எஜமானாக வாழ்ந்து கொண்டிருந்தான். அந்த வீட்டில் இருந்த சுவாதியை சதீஸ் மனப்பூர்வமாக விரும்பினான். இருவருக்கும் இடையில் காதல் பிறந்தது. இருவரும் மிக நெருக்கமாகப் பழகினர். சுவாதியின் தாயும்,தந்தையும் கம்பனி வேலையாக அடிக்கடி வெளியூர் சென்று வந்தனர்.

சகல வீட்டுப் பொறுப்புக்களையும் சதீஸ் செய்து கொண்டிருக்கின்றான். சுவாதியை மறக்க முடியாத நிலைக்கு சதீஸ் தள்ளப்பட்டான். அவளும் இவன் மேல் பாசத்ததைப் பொலிந்தால். தன் வீட்டுக்கு வேலைக்கு வந்தவனைப் போல நடத்த வில்லை. இருவரும் அடிக்கடி சொப்பிங் செய்ய போவதும், டெனிஸ் விளையாட அழைத்துச் செல்வதுமாக இருந்தான். இவர்களின் காதல் விடயம் தன் தங்கையின் மூலமாக பெற்றோருக்குத் தெரிய வந்தது. ஒரு நாள் சுவாதியை அழைத்து மிகவும் கோபமாக ஏசுகின்றார்.

ஒயா தன்னவத ஏயா கவுத கியலா?

ஏயா வத்தே வெடகரன்ன தாத்தா, அம்மாகே புத்தா. ஒயா எயாகே பிட்டிபஸ்சே யனவாத? ஒயாட்ட மொலே நெத்த?

அபே பௌல (Respect) நம்ம குடும்ப மானம் போகுது. ஒயா ஸ்கூலே கீலா மேகத இகனகத்தே. யுஃட்டு ஹொந்த சுநளரடவ கன்ட ஓனே. ஒயா கெம்பஸ் கீலா தொஸ்தரக வென்ட ஓனே.



டெஹ்ரான்

ஆயிரக்கணக்கான மக்கள் அஞ்சலியுடன்

# ஜனாஸாக்கள் இன்று நல்லடக்கம்

ஹெலிகொப்டர் விபத்தில் பலியான ஈரான் ஜனாதிபதி ரைசி, வெளியுறவு அமைச்சர் அமிரப்துல்லாஹியன் உள்ளிட்டோரின் இறுதி ஊர்வலம் தப்ரிஸ் நகரில் இடம்பெற்றது. இதில் ஆயிரக்கணக்கான மக்கள் இறுதி அஞ்சலி செலுத்தினர்.

ஈரான் அதிபர் இப்ராகிம் ரைசி, வெளியுறவு அமைச்சர் ஹசேன் அமிரப்துல்லாஹியன் உள்ளிட்ட 8 பேர் கடந்த 19ம் திகதி பயணித்த ஹெலிகொப்டர், ஈரானின் கிழக்கு அஜர்பைஜான் மாகாணத்தில் அடர்ந்த வனப்பகுதியில் மலைகளின் மீது விழுந்து நொறுங்கியது. மோசமான வானிலையால் இந்த விபத்து நிகழ்ந்ததாக கருதப்படுகிறது. தீவிர தேடுதல் முயற்சிக்குப் பின் ஜனாதிபதி ரைசி உள்ளிட்ட 8 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டன. ஜனாதிபதியின் மறைவைத் தொடர்ந்து 5 நாள் அரசு துக்கம் அனுசரிக்கப்படுவதாக ஈரான் உச்ச தலைவர் ஆயத்துல்லா அலி காமனெயி அறிவித்தார்.

அதைத் தொடர்ந்து, பலியான ஜனாதிபதி ரைசி உள்ளிட்டோரின் உடல்கள் கொண்டு செல்லப்பட்ட தப்ரிஸ் நகரில் இருந்து இறுதி ஊர்வலம் செவ்வாய்க்கிழமை (21) ஆரம்பமானது

இதில் ஆயிரக்கணக்கான பொதுமக்கள்



கறுப்பு உடையுடன் குவிந்து ஜனாதிபதி ரைசி உள்ளிட்டோருக்கு இறுதி அஞ்சலி செலுத்தினர். இறுதி ஊர்வலம் குவாம் நகரை அடைந்து அங்கிருந்து 21 ஆம் திகதி இரவு தலைநகர் டெஹ்ரானுக்கு உடல்கள் கொண்டு வரப்பட்டன. டெஹ்ரானில் உச்ச தலைவர் காமனெயி முன்னிலையில் இறுதி ஊர்வலம் நடைபெற்றது. இந்நிலையில், ரைசின் சொந்த ஊரான மஸ்ஸாத்துக்கு உடல் கொண்டு செல்லப்பட்டு இன்று (23) வியாழக்கிழமை நல்லடக்கம் செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இறுதி ஊர்வலத்தையொட்டி டெஹ்ரானில் பலத்த பாதுகாப்பு போடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கொல்கத்தா

இந்தியாவில்

# பங்களாதேஷ் எம்.பி மாயம்

பங்களாதேசில் ஷேக் ஹசீனா தலைமையில் அவாமி லீக் ஆட்சி நடைபெற்று வருகிறது. இந்த கட்சியின் பாராளுமன்ற பொறுப்பு வகித்து வருபவர் அன்வருல் அசிம்.

இந்த நிலையில், அன்வருல் அசிம் கடந்த 12ஆம் திகதி மருத்துவ சிகிச்சைக்காக கொல்கத்தாவுக்கு வந்து, பாராநகர் பகுதியில் தனது நண்பர் வீட்டில் தங்கியுள்ளார். இதனையடுத்து, அடுத்த நாள் வெளியே சென்ற அவர், பின்னர் வீடு திரும்பவில்லை.

இது குறித்து அசிமின் நண்பர், அவரின் கைபேசிக்கு தொடர்புகொண்டுள்ளார். ஆனால், எந்தவித பதிலும் வராததால் அதிர்ச்சியடைந்தவர், இந்த சம்பவம் குறித்து பொலிஸாரிடம் புகார் அளித்துள்ளார்.

இந்நிலையில், 13ஆம் திகதி காணாமல் போனவர், 8 நாட்கள் ஆகியும் கிடைக்கவில்லை. மேலும், அவர் கொலை செய்யப்பட்டு கொல்கத்தாவின் நியூடவுன் பகுதியில் அவரது உடலை வீசியிருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.



எம்.பி அசிமின் நண்பர் கொடுத்த புகாரின் அடிப்படையில், அவரை கண்டுபிடிக்க பொலிஸார் தீவிர விசாரணையில் இறங்கியுள்ளனர்.

சென்னை

மாணவிகளை பாலியல் தொழிலில்

# ஈடுபடுத்தியவர்கள் கைது

பிளஸ் டூ படிக்கும் சிறுமிகளை ஆசை வார்த்தை கூறி பாலியல் தொழிலில் ஈடுபடுத்திய பெண் தரகர் உள்ளிட்ட 7 பேர் கொண்ட கும்பலை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இதுதொடர்பாக பொலிஸ் ஆணையருக்கு, சென்னை மாவட்ட குழந்தைகள் நலக் குழு மூலம் புகார் வந்தது. இந்த புகாரின் மீது நடவடிக்கை எடுக்க மத்திய குற்றப்பிரிவு ஆய்வாளர் குழுவினர் விசாரணை நடத்தினர்.

அப்போது, இரகசிய தகவலின் அடிப்படையில் சென்னை வளசரவாக்கத்தில் ஒரு வீட்டில் பொலிஸார் அதிரடி சோதனை நடத்தினர்.

அப்போது, அங்கிருந்த மேற்கு சைதாப்பேட்டையை சேர்ந்த 70 வயது முதியவர் அளித்த தகவலின்பேரில், இன்னொரு



பகுதியைச் சேர்ந்த பெண் தரகர் ஒருவரையும் அவரது சகோதரியையும் அழைத்து வந்து விசாரணை நடத்தினர். இந்த விசாரணையில் பல அதிர்ச்சித் தகவல்கள் வெளியாகின.

பெண் தரகரின் மகள் தற்போது 12 ஆம் வகுப்பு படிக்கும் நிலையில், அவருடன் படிக்கும் வறுமையில் உள்ள மாணவிகள் மற்றும் தனித்து வாழும் பெண்களின் மகள்களை குறிவைத்து இந்த கும்பல் வலைவீசியுள்ளது.

படித்துக்கொண்டே பகுதிநேர வேலை செய்யும் மாணவிகளையும் சம்பாதிக்கும் ஆசை காட்டி செலவுக்கு 500, 1000 ரூபாய் என பணம் கொடுத்து இந்த பெண்மணி தனது வலைக்குள் கொண்டுவந்தது உள்ளிட்ட திடுக்கிடும் தகவல்கள் வெளிச்சத்துக்கு வந்தன.

இதையடுத்து, விபச்சார தடுப்புப் பிரிவில், குழந்தைகள் நலக்குழு அதிகாரி பாலகுமார் அளித்த புகாரில் 70 வயது நபர் உட்பட 7 பேரை பொலிஸார் கைது செய்தனர்.

போக்சோ சட்டத்தின் கீழ் வழக்குப்பதிவு செய்யப்பட்டு கைது செய்யப்பட்ட நபர்களிடம் இருந்து 7 கைபேசிகள், ஒரு சொகுசு கார் பறிமுதல் செய்யப்பட்டது.

ஆந்திரா

வாக்குப்பதிவு இயந்திரத்தை

# வீசி எறிந்த வேட்பாளர்

ஆந்திராவில் வை.எஸ்.ஆர் காங்கிரஸ் வேட்பாளர் பின்னெல்லி ராமகிருஷ்ணா ரெட்டி வாக்கு இயந்திரத்தை உடைத்து சேதப்படுத்திய காட்சி இணையத்தில் பரவி வருகிறது. ஆந்திராவில் கடந்த 13ஆம் திகதி நடந்த வாக்குப்பதிவு நாளிலும் அதன் பிறகும் நடந்த வன்முறை சம்பவங்கள் ஒவ்வொன்றாக வெளிவருகின்றன.

அதன்படி கடந்த 13ஆம் திகதி வை.எஸ்.ஆர் காங்கிரஸ் கட்சி வேட்பாளரான பின்னெல்லி ராமகிருஷ்ணா ரெட்டி, வாக்கு இயந்திரத்தை கீழே போட்டு உடைத்த காட்சி வெளியாகி அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

வாக்குச்சாவடி மையத்திற்கு தனது ஆதரவாளர்களுடன் புகுந்த அவர், அங்கிருந்த ஊழியர்களை மிரட்டி மின்னணு வாக்குப்பதிவு இயந்திரத்தை தரையில் போட்டு உடைத்தார்.



அதனை தடுக்க முயன்றவர்களை எம்.எல்.ஏ.வின் ஆதரவாளர்கள் தாக்கினர்.

இந்த சம்பவம் தொடர்பாக பொலிஸார் மேற்கொண்ட நடவடிக்கை தொடர்பாக எந்தவிதமான அறிவிப்பும் வெளியிடப்படவில்லை. அதே சமயம் இந்த தாக்குதல் சம்பவத்தின் காட்சியை தெலுங்கு தேசம் கட்சியினர் பலருக்கும் பகிர்ந்து வருகின்றனர்.

ஐ.பி.எல்:

# இறுதிப் போட்டியில் கொல்கத்தா

இந்தியன் பிறீமியர் லீக்கின் (ஐ.பி.எல்) இறுதிப் போட்டிக்கு கொல்கத்தா நைட் றைடர்ஸ் தகுதி பெற்றுள்ளது.

அஹமதாபாத்தில் செவ்வாய்க்கிழமை (21) நடைபெற்ற சண்றைசர்ஸ் ஹைதரபாத்துடனான முதலாவது தகுதிகாண் போட்டியில் வென்றே இறுதிப் போட்டிக்கு கொல்கத்தா தகுதி பெற்றுள்ளது.

இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற சண்றைசர்ஸின் அணித்தலைவர் பற் கமின்ஸ் தமதணி முதலில் துடுப்பெடுத்தாடுமென அறிவித்தார்.

அந்தவகையில் முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய சண்றைசர்ஸ், மிற்செல் ஸ்டார்க்கின் முதலாவது ஓவரிலேயே தமது அதிரடி ஆரம்பத் துடுப்பாட்டவீரர் ட்ரெவிஸ் ஹெட்டை இழந்ததுடன், வைபவ் அரோராவின் அடுத்த ஓவரிலேயே மற்றைய அதிரடி ஆரம்பத் துடுப்பாட்டவீரரான அபிஷேக் ஷர்மாவையும் இழந்தது.

பின்னர் ஸ்டார்க் வீசிய இனிங்ஸின் ஐந்தாவது ஓவரின் இறுதி இரண்டு பந்துகளில் நிதிஷ் குமார் ரெட்டியையும், ஷபாஸ் அஹ்மட்டையும் பறிகொடுத்தது.

இந்நிலையில் ராகுல் ட்ரிபாதி, ஹென்றிச் கிளாசென் மூலம் இனிங்ஸைக் கட்டியெழுப்பிய சண்றைசர்ஸ், 32 (21) ஓட்டங்களுடன் வருண் சக்கரவர்த்தியிடம் கிளாசெனை இழந்தது.


பின்னர் சிறிது நேரத்தில் 55 (35) ஓட்டங்களுடன் ட்ரிபாதி ரண் அவுட்டாக, அடுத்த பந்திலேயே அபிஷேக் ஷர்மாவுக்குப் பதிலாக தாக்கம் செலுத்தும் மாற்றுவீரராகக் களமிறங்கிய சன்வீர் சிங், சுனில் நரைனிடம் வீழ்ந்தார். அடுத்த ஓவரில் அப்துல் சமத் ஹர்ஷித் ரானாவிடமும், அதற்கடுத்த ஓவரில் புன்வேஷ்வர் குமார் வருண் சக்கரவர்த்தியிடமும் வீழ்ந்தனர்.

இறுதியில் கமின்ஸ் 30 (24) ஓட்டங்களுடன் அன்ட்ரே ரஸலிடம் விழ 19.3 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 159 ஓட்டங்களையே சண்றைசர்ஸ் பெற்றது.

பதிலுக்கு 160 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய கொல்கத்தா, வேகமான ஆரம்பத்தைப் பெற்ற நிலையில் 23 (14) ஓட்டங்களைப் பெற்ற ரஹ்மனுல்லாஹ் குர்பாஸை தங்கராசு நடராஜனிடமும், 21 (16) ஓட்டங்களைப் பெற்ற நரைனை கமின்ஸிடமும் இழந்தது.

எனினும் வெங்கடேஷ் ஐயரின் ஆட்டமிழக்காத 51 (28), அணித்தலைவர் ஷ்ரேயாஸ் ஐயரின் ஆட்டமிழக்காத 58 (24) ஓட்டங்களுடன் 13.4 ஓவர்களில் 2 விக்கெட்டுகளை இழந்த நிலையில் வெற்றியிலக்கை கொல்கத்தா அடைந்தது.

இப்போட்டியின் நாயகனாக ஸ்டார்க் தெரிவானார்.



முதலாவது போட்டியில்

# ஐ. அமெரிக்காவிடம் தோற்ற பங்களாதேஷ்

ஐக்கிய அமெரிக்காவுடனான மூன்று போட்டிகள் கொண்ட இருபதுக்கு 20 சர்வதேசப் போட்டித் தொடரில், டெக்ஸாஸில் செவ்வாய்க்கிழமை (21) நடைபெற்ற முதலாவது போட்டியில் பங்களாதேஷ் தோற்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: ஐ. அமெரிக்கா

பங்களாதேஷ்: 153/6 (20 ஓவ. ) (துடுப்பாட்டம்: தௌஹிட் ஹிரிடோய் 58 (47), மகமதுல்லா 31 (22) ஓட்டங்கள். பந்துவீச்சு: ஸ்டீவன் டெய்லர் 2/9 [3], சௌரஃப் நெட்ரவல்கர் 1/27 [4], கொரி அன்டர்சன் 0/10 [2], ஹர்மீட் சிங் 0/27 [4])

ஐ. அமெரிக்கா: 156/5 (19.3 ஓவ. ) (துடுப்பாட்டம்: கொரி அன்டர்சன் ஆ.இ 34 (25), ஹர்மீட் சிங் ஆ.இ 33 (13), ஸ்டீவன் டெய்லர் 28 (29), அன்ட்ரீஸ் கௌஸ் 23 (18) ஓட்டங்கள். பந்துவீச்சு: ஷொரிஃபுல் இஸ்லாம் 1/31 [4], ரிஷாட் ஹொஸைன் 1/16 [2], ஷகிப் அல் ஹஸன் 0/16 [3], மஹெடி ஹஸன் 0/27 [4], மகமதுல்லா 0/20 [2.3])

போட்டியின் நாயகன்: ஹர்மீட் சிங்

இரண்டு அணிகளுக்குமிடையிலான இரண்டாவது போட்டியானது இன்றிரவு 8.30 மணிக்கு நடைபெறவுள்ளது.




எல்.பி.எல் ஏலம்:

# ஜஃப்னா கிங்ஸில் மேர்வின் அபினாஷ், அருள் பிரகாசம்

இலங்கையின் உள்ளூர் இருபதுக்கு 20 தொடரான லங்கா பிறீமியர் லீக்கின் (எல்.பி.எல்) இவ்வாண்டுக்கான ஏலமானது செவ்வாய்க்கிழமை (21) நடைபெற்றபோது ஜஃப்னா கிங்ஸ் அணியால் யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரியின் முன்னாள் வீரரான மேர்வின் அபினாஷ், கொழும்பு இந்துக் கல்லூரியின் முன்னாள் வீரரான அருள் பிரகாசம் ஆகியோர் ஏலமெடுக்கப்பட்டனர்.

கிங்ஸால் ஏலத்துக்கு முன்னர் தக்க வைக்கப்பட்ட, கைச்சாத்திட்டவர்கள் பட்டியலில் விஜயகாந்த் வியாஸ்காந்த் இடம்பெற்றிருந்ததோடு, ஏலத்தின்போது கடந்த முறை ஏலமெடுக்கப்பட்டிருந்த யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் முன்னாள் வீரரான தீஸன் விதுஷனும் ஏலமெடுக்கப்பட்டிருந்தார்.

ஏலத்தில் அதிக தொகைக்கு 120,000 ஐக்கிய அமெரிக்க டொலர்களுக்கு கொழும்பு ஸைரக்கர்ஸால் மதீஷ பத்திரண



கைச்சாத்திடப்பட்டிருந்தார்.

இந்நிலையில், குஷல் பெரேரா உள்ளிட்டவர்கள் ஏலமெடுக்கப்படவில்லை.

குழாம்கள் ஏல முடிவில் பின்வருமாறு காணப்படுகின்றன. வீரர்களின் பெயரின் பின்னால் அடைப்புக்குறி இடப்பட்டவர்கள் ஏலத்தில் எடுக்கப்பட்டதுடன், மற்றையவர்கள் ஏலத்துக்கு முன்னால் தக்க வைக்கப்பட்டதுடன், கைச்சாத்திடப்பட்டும் இருந்தார்கள்.

கொழும்பு ஸைரக்கர்ஸ்: மதீஷ பத்திரண ($120,000), சாமிக கருணாரத்ன, திஸர பெரேரா, சதீர சமரவிக்கிரம, நிபுன் தனஞ்சய, ஷடாப் கான், கிளென் பிலிப்ஸ், சாமிக குணசேகர ($10,000), டுனித் வெல்லலாகே ($50,000), ரஹ்மனுல்லாஹ் குர்பாஸ் ($50,000), தஸ்கின் அஹ்மட் ($50,000), அஞ்சலோ பெரேரா ($20,000), ஷெவோன் டேனியல் ($15,000), கருக சங்கெத் ($20,000), ஷெகான் பெர்ணாண்டோ ($5,000), கவின் பண்டார ($5,000), இசித விஜேசுந்தர ($5,000), முஹமட் வஸீம் ($20,000), அல்லாஹ் கஸன்ஃபார் ($10,000)

தம்புள்ள தண்டர்ஸ்: டில்ஷான் மதுஷங்க, நுவான் துஷார, துஷான் ஹேமந்த, பிரவீன் ஜெயவிக்கிரம, முஸ்தபிசூர் ரஹ்மான், இப்ராஹிம் ஸட்ரான், லஹிரு உதார ($10,000), அகில தனஞ்சய ($20,000), தனுஷ்க குணதிலக ($22,000), இஃப்திஹார் அஹ்மட் ($50,000), நுவனிடு பெர்ணாண்டோ ($34,000), நுவான் பிரதீப் ($36,000), ரனேஷ் சில்வா ($5,000), சொஹான் டீ லிவெரா ($5,000), ஹஸ்மதுல்லாஹ் ஸஸாய் ($50,000), கரிம் ஜனட் ($80,000).

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வியாழக்கிழமை 23, மே 2024, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.